Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழபபாணம்.

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபால பெட்டி என் 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | சுபகிருது | தை 6 ஆம் நாள் | ஷஃபான் பிறை22 | (19-1-63) | சனிக்கிழமை | இதழ் 358

# உஷார்! ராணுவத்துக்கு அரசாங்கம் உத்தரவு

## பஸ் ஊழியர் வேலைநிறுத்த முடிவின் எதிரொலி

### பலத்தைக் காட்டவேண்டாம் என தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

இ. போ. ச. வேலை நிறுத்தத்தில் இறங்குவதன்மூலம் நாட்டில் பஸ் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டால் அரசாங்கத்துக்கு உதவிபுரியத் தயாராய் இருக்குமாறு ராணுவத் தலைமைக் காரியாலயம் உஷார்படுத்தப்பட்டிருக்கிறது. போக்குவரத்து பாதிக்கப்பட்டால் ராணுவத்தை உபயோகிக்கும் முடிவை பாதுகாப்பு அமைச்சு ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குத் தெரிவித்திருக்கிறது.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனப் பொதுக் காரியதரிசி திரு. எஸ். டபிள்யூ. சண்முகதாசன் விடுத்துள்ள அறிக்கையில் தகராறிலுள்ள பிரச்னைகளுக்கு ராணுவத்தை உபயோகிப்பதன்மூலம் தொழிலாளரை நசுக்க முயலவேண்டாம் என அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார்.

"அரசாங்கம் பலத்தைக் காட்டுவதின்மூலம் தற்போதைய தகராற்றில் தொழிலாளரை நசுக்க முயல்வது விவேகமான செயலல்ல. பலத்தைக் காட்டுவதனால் தொழிலாளரை நசுக்கிவிட முடியாது. இவ்வித நடவடிக்கையின்மூலம் அவர்கள் நிலை மேலும் பலமடையும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்!

## கேணல் உடுகமை வடபகுதி வந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் உத்தேச வேலை நிறுத்தப் பயமுறுத்தலால் வடபகுதியில் பஸ்போக்குவரத்துச் சேவை தடைபட்டு நெருக்கடி ஏற்படாமலிருப்பதற்கான நடவடிக்கைளுக்கு ராணுவத்தினரும் கடற்படையினரும் அளிக்கக் கூடிய உதவிகள் பற்றி ஒழுங்குகள் செய்வதற்கு லெப்டினன்ட் கேணல் ஏ. ஆர். உடுகமவும் கடற்படை உயர்தர அதிகாரியொருவரும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பினர்.

நாடுமுழுவதிலும் பஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யும் பட்சத்தில் தேசிய போக்குவரத்துச் சேவை சீர்குலைந்து மோசமான நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு ராணுவத்தினரும் இதர ஆயுதப் படைச் சிப்பந்திகளும் எந்த வகையில் உதவியளிக்கலாமென்பது பற்றி முப்படைத் தளபதிகளின் மகாநாடொன்றை சில தினங்களுக்கு முன் ராணிமாளிகையில் கவர்னர் ஜெனரல் கூட்டி ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது. இ. போ. ச. ஊழியர்கள் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் தொழில்தேசிய சேவைகள் மய மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார். இப்பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்து வேலை நிறுத்தம் நடைபெற்றால் எந்த நிலைமைக்கும் தயாராக இருக்குமாறு நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நேற்று முன்தினமிரவு உஷார் உத்தரவு பிறப்பித்தார்.

### பேச்சுவார்த்தை நீடிப்பு

நேற்றுக்காலையிலும் மாலையிலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் தொழில் தேசிய மய சேவைகள் மய மந்திரி திரு. எம். பி. டி. இஸட். சிறிவர்த்தனவுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. நேற்றிரவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டபோதிலும் இரு தரப்பினரும் ஒரு சுமுக முடிவுக்கு வரும் பொருட்டு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை முடிவு வெளிசாகவில்லை.

## கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் சென்னையில் காலமானர்

சென்னை, ஜன. 18

தமிழ் நாடு கம்யூனிஸ்ட்கட்சியின் முக்கிய தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'ஜனசக்தி'யின் ஆசிரியருமான திரு. ப. ஜீவானந்தம் இன்று காலை சென்னையில் காலமானர்.

65-வயதான திரு. ஜீவானந்தம் தமிழ் நாடு சட்டசபையில் பலவருடங்கள் அங்கத்தவராகப்பணியாற்றியிருக்கிறார். அரசியல் வாதிமட்டுமல்ல இலக்கிய அறிஞருமான திரு. ஜீவானந்தம் சிறந்த சொற்பொழிவாளருமாவார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த போதிலும் திரு. ஜீவானந்தம் காந்திபக்தருமாவார். சீன–இந்திய எல்லைத் தகராறு காரணமாக பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நாடுமுழுவதிலும் கம்யூனிஸ்டுகள் பலர் கைது செய்யப்பட்ட போதிலும் திரு. ஜீவானந்தம் கைது செய்யப்படவில்லை.

## '6 புதியவட்டாரங்கள் உருவாக்கப்பட வேண்டும்'

### செனட்டர் நல்லையா கடிதம்

யாழ்ப்பாணம், சனி

இந்தமாதம் 12-ம் திகதி வெளியான தினசரி ஒன்றில் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் தலைவர் யாழ்ப்பாண நகரசபைவட்டாரங்களில் இரு புதிய வட்டாரங்களை உருவாக்க முடிவுசெய்துள்ளதாகத் தெரிவித்திருந்ததாகவும் இது தமது எண்ணப்படி அமையுமானல் தாம் அதை முழுமனதுடன் ஆதரிப்பதாகவும் செனட்டர் ஜி. நல்லையா ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

செனட்டர் நல்லையா தாம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது.

இந்த இரு புதிய வட்டாரங்களும் மீனவரின் சமூகத்தின் நலன்களைப் பாதுகாப்பதாகவிருக்கும் என நான் நம்புகின்றேன். எனது எண்ணம் சரியாகவிருந்தால் இந்தமுடிவை

8 பக்கம்பார்க்க)

## தேசாபிமானி பறிமுதல்

புதுடில்லி. ஜன. 18

இலங்கையிலிருந்து வெளியாகும் தேசாபிமானி பத்திரிகையின் டிசம்பர் முதல் திகதி இதழ் அனைத்தையும் மத்திய அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டது. அதற்குப் பின்புள்ள பிரதிகளை விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டது. பாதுகாப்புக்குப் பாதகமான விஷயங்கள் அதில் பிரசுரிக்கப்பட்டிருந்ததாகக்கருதப்பட்டுள்ளது.

## சீனப் பிரதிநிதி தடுக்கப்பட்டார்

பெர்லின், ஜன. 18

கிழக்கு ஜெர்மனியில் நடைபெறும் கம்யூனிஸ்ட் மகாநாட்டில் சீனப் பிரதிநிதி, இன்று யூகோஸ்லேவியாவைத் தாக்கிப் பேச ஆரம்பித்த போது பிரதிநிதிகள் கூச்சல்போட்டும், சீட்டி அடித்தும் அவரது பேச்சைக் குழப்பினர்.

சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் கூட்டத்தில்அப்போது இருக்கவில்லை. சீனப் பிரதிநிதி தொடர்ந்து பேசமுயன்றபோது பிரதிநிதிகள் அவரைத் தடுத்துவிட்டனர்.

## புத்தகக் காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பிப்ரவரி 2-ம் திகதி முதல் 9-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவில் புத்தகக் காட்சி ஒன்று நடைபெறும்.

## 920 அரிசி மூடைகள் காணப்படவில்லை?

### ஸ்டோர் கீப்பர் கைது!

யாழ்ப்பாணம், சனி

சென்ற வருடம் ஏப்ரல் 17-ம் திகதியும் ஜூன் மாதம் 17-ம் திகதியும் காங்கேசன் துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இறக்குமதியாகிய 1 லட்சத்து 34 ஆயிரத்து 747 அரிசி மூட்டைகளில் 920 அரிசி மூட்டைகள் காணது போனதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட புலன் விசாரணையில் யாழ்ப்பாணம் அரிசிக் குதத்தில் கடமையாற்றிவந்த ஸ்டோர் கீப்பர் கிக்கலஸ் பிள்ளை என்பவரை கரையூர் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஈ. ஈஸ்வரபாதம் கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாலடன் முன்னிலையில் ஆஜர் செய்தார். எதிரி ரூ. 3000 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பர்மாவிலிருந்து ஷாங்காங், யூனியன் ட்றேடர் ஆகிய இரு கப்பல்களிலும்முறையே 65,322 மூட்டை அரிசியும், 69,425 மூட்டை அரிசியும் இங்கு வந்தன. இந்த அரிசி இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க அரிசிக்குதங்களுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கூற்ற லோக் இனும். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு வெள்ளாந் தெரு கு. செல்லையா அவர்களின் அடைவு கடையில் 18-2-59 முதல் 30-5-61 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

640 C. ரகுநாதன்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கண்டிவீதி, அரியாலை வீதிகளுக்கு அணித்தாக, யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கருகில், கட்டடம் கட்டுவதற்கான 14½ பரப்பு மேட்டுக் காணியும் இக்காணிக்குப் பின்புறமாக 70 பரப்பு செய்கை வயலும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஜோசப் திருச்செல்வம், 123, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.


## ORDER NISI
## In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } 1242.

In the matter of the intestate estate of the late Joachimpillai Simon Joseph of No. 6, Cathedral Street, Jaffna

Deceased

Grace Lucia widow of Joachimpillai Simon Joseph of No. 6, Cathedral Street, Jaffna

Petitioner

Vs.

1. Christabel Padmini Joseph
2. Isabel Rajini Joseph
3. Mary Magdalin Ranjini Joseph
4. Claribel Rohini Joseph
5. Christopher Rajasingham Joseph
6. Bernadette Angelina Joseph
7. Joachimpillai Arulnayagam Dominic

Respondents

The matter coming on for disposal before O. L. De. Krester Esquir, District Judge of Jaffna on the 24th day of November 1962 in the presence of Mr. J. M. Simon, Proctor on the part of the petitioner and the affidavit of the Petitioner having been read, it is declared that the Petitioner is the lawful widow of the said intestate and is entitled to have letters of administration to the estate of the above named deceased unless the Respondents or any other person or persons shall on or before the 30th day of January 1963 show sufficent cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the 7th Respondent is appointed Guardian-ad-litem over the minors 1st to 6th Respondents.

Jaffna this 24th day of November 1962.

(Sgd.) T. Muthusamipillai.
Actg. District Judge.

19-12-62

# கலியாணம் செய்ய காதல் ஜோடிக்கு அனுமதி!
## ஆனல் இரண்டு வருட நன்னடத்தை பிணையில் செல்ல உத்தரவு

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலியைச் சேர்ந்த சண்முகம் புவனேஸ்வரி 14 வயது இளம் பெண்ணை அவரின் தாயாரின் அனுமதியின்றி கடத்திச் சென்றதாக அதே ஊரைச்சேர்ந்த பாலன் வீரசிங்கம் என்பவர் மீது காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. எஸ். யோகநாதன் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இக் காதல் ஜோடியை கிளிநொச்சியில் வைத்து கைது செய்ததாக பொலிசார் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. காதல் ஜோடி தாம் திருமணம் செய்துகொள்ள பெற்றோரின் அனுமதி கோரியமையால் நீதிபதி திருமணஞ் செய்ய அனுமதி கொடுத்து எதிரியிடம் "இப்படியான விவாகங்கள் அதிக காலம் நீடிப்பதில்லை. எனவே இரண்டு வருட காலத்திற்கு உன்னை 250 ரூபாய் நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கிறேன். இந்த இரண்டு வருட வாழ்க்கையில் உமது குடும்பத் திறமையைப் பொறுத்தே நீர் இருபது வருட காலமும் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக கழிப்பிரா இல்லையா என்பதை முடிவு செய்ய முடியும்" என்று குறிப்பிட்டார்.

இன்ஸ்பெக்டர் திரு. கந்தையாவின் உதவியுடன் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்காளி தரப்பிலும் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரிதரப்பிலும் ஆஜரானர்கள்.

## கூட்டுறவு பேக்கரியாகும்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் காதி அபூபக்கர் வீதியிலுள்ள டஷீன பேக்கரியை கூட்டுறவுப் பேக்கரியாக அமைத்துத் தரும்படி உணவு மந்திரியிடம் கோரப் பட்டுள்ளது. அண்மையில் கல்வி அமைச்சரும் உணவு அமைச்சரும் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தபோது இந்தப் பேக்கரிக்கும் சென்று பார்வையிட்டனர்.

இப்பேக்கரியை கூட்டுறவு பேக்கரியாக்குவதற்கு உத்தரவு தருவதாக உணவு அமைச்சர் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.


## யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்களின் எல்லைகளை மீள நிர்ணயித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை தற்போதைய வட்டாரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் யாழ்ப்பாண நகரின் வட்டாரங்களின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கு இதில் அக்கறையுள்ளவர்களிடமிருந்து எழுத்து மூலம் ஆலோசனைகள் கோரும்படி நான் பணிக்கப் பட்டுள்ளேன். இப்படியான ஆலோசனைகள் 1963-ம் ஆண்டு ஜனவரிமாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00மணிக்குமுன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

டி. டி. ஜயசிங்ஹ
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18-1-63 654

## சென்.ஜோன்ஸ்அக்கடமி
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்

ஜி. ஸி. ஈ. (உயர்தரமும் சாதாரணமும்) எச். எஸ். ஸி, பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைஆகியவகுப்புகள் 21-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

விண்ணப்பக்காரர்கள் அன்றைய தினம் முற்பகல் பத்து மணிக்கு அக்கடமிக் காரியாலயத்தில் வந்து தங்கள் பிரவேசப் பத்திரங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. ஸி. ஹண்டி
பதிவாளர்.


## பௌத்த காங்கிரஸ் மகாநாடு

மின்னேரியா, வெள்ளி

ஜனவரி 24-ந் திகதி தொடக்கம் 27-ந் திகதி வரை பொலநறுவையில் நடைபெறவிருக்கும் பௌத்த காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு பிரமாண்டமான அளவில் வரவேற்பளிக்க பொலநறுவ அரசாங்க அதிபர் திரு. நிட்ஜ்வே திலகரத்ன தலைமையில் ஒரு உபகமிட்டி செயலாற்றி வருகிறது. இந்த வரவேற்புக் கமிட்டி 250 பேர்களுக்கு விசேட அழைப்பு விடுத்துள்ளது.

பொலநறுவை புதிய கச்சேரி சந்தியில் நிறுவப்படவிருக்கும் 'மண்டபய'த்திற்கான அடிக்கல்லை அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. லலிதா ராஜபக்ச 26-ந் திகதி காலை நாட்டுவார்.

## வேட்டைக்குச் சென்றவர்
### துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்!

நக்குவாலை, வியாழன்

விண்டிஹென காட்டுக்குள் வேட்டையாடும் முகமாக தனது நண்பர்கள் மூவருடன் சென்ற டி. சண்டோறிஸ் என்பவர், எதிர்பாராதவிதமாக தனது நண்பர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்!

சண்டோறிஸும் அவரது மூன்று நண்பர்களும் விண்டிஹென காட்டுக்குள் வேட்டையாடச் சென்றனர். அலிஸா என்பவர் மறைந்து நிற்க, மற்றவர்கள் காட்டுப்பன்றியொன்றைத் துரத்திக்கொண்டு வந்தனர். அப்பொழுது பற்றைக்குள் துப்பாக்கியுடன் மறைந்து நின்ற அலிஸா, சண்டோறிஸைக் காட்டுப்பன்றியென்று தவருகக் கருதி துப்பாக்கியால் சுட்டார். சண்டோறிஸ் ஸ்தலத்திலேயே மாண்டார்.

சண்டோறிஸ் மரணம் குறித்து நடைபெற்ற மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. டி. டி. எக்கநாயக்கா, அலிஸாவை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டார்.

## வடபகுதி அசைஸ் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி அசைஸ் நீதிமன்ற விசாரணைகள் பெப்ரவரி மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன. முன்னள் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியும் தற்போது சுப்ரீம் கோர்ட் நீதியரசருமான திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இந்த விசாரணைகள் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறும்.

## இரு பிள்ளைகள் நீரில்மூழ்கி மரணம்

குருநாகல், வெள்ளி

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரே பெற்றோரின் இரு பிள்ளைகள் ஒரே நேரத்தில் தண்ணீரில் மூழ்கி மரணமான பரிதாப சம்பவம் ஒன்று குருநாகல் மாவட்டத்திலுள்ளகெட்டுவான என்னுமிடத்தில் அண்மையில் நடைபெற்றது.

லலிதா என்னும் பதின்மூன்று வயதுச் சிறுமியும், சிரிமனே என்னும் பதினெரு வயதுச் சிறுவனும் 'ரியூப்' ஒன்றை மிதக்கவிட்டு வெந்தறுவீவா என்னும் குளத்தில் நீந்திப் பழகிக்கொண்டிருந்தார்கள், காற்றடைக்கப்பட்ட அந்த 'ரியூப்' நடுக் குளத்திற்கு சென்றது நடுக் குளத்தில் 14 அடி மட்டத்தில் தண்ணீர் இருந்தது. சிறுவனும், சிறுமியும் நடுக்குளத்திற்குச் சென்றதைக் கண்டதும் அவர்களுடன் வந்த அவர்களின் உறவினர் ஓடோடி நீந்திச் சென்றார் நடுக்குளத்திற்கு. சிறுவன் இவரின் தோளில் தொற்றிக்கொண்டான். ரியூப்பின் நடுவிலிருந்த சிறுமி 'ரியூப்' சரியவே தத்தளித்தாள். சிறுமியைக் காப்பாற்ற அவள் உறவினர் முயன்ருர். அப்போது சிறுவன் நீரில்மூழ்கினன். இறுதியில் சிறுமியும் மூழ்கவேண்டி நேரிட்டது. பல மணி நேரங்களுக்குப்பின் இருவரின் சடலங்களும் எடுக்கப்பட்டன.


## 1963 ஈழநாடு தினக்குறிப்பு

**2** வகை அமைப்பில் விற்பனையாகின்றது!

1. தினக்குறிப்பு
2. மாணவர் தினக்குறிப்பு

சிறப்பு அம்சங்கள் இம்முறை சேர்க்கப்பட்டுள்ளன

★ தினக்குறிப்பு: அரசாங்க, பொது தகவல்கள் உட்பட ஏனைய பல அம்சங்களும் கொண்டது. இத் தினக்குறிப்பில் விளம்பரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

— விலை ரூபா 1-00

★★ மாணவர் தினக்குறிப்பு: கண்ணையும், கருத்தையும் கவரும்வகையில் பலவர்ண அட்டையுடனமைந்துள்ளது. மாணவர்களுக்கு உபயோகமான சகல தகவல்களையும் கொண்டது, நூல் இடப் பெற்றது.

— விலை ரூபா 1-25

மாணவர் தினக் குறிப்பு மீண்டும் விற்பனையாகின்றது.

தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

## ஷோவலஸ் பசளைகள்

அதிக உற்பத்தியைக் கொடுக்கின்றன




363, கொள்ளுப்பிட்டி வீதி,
கொழும்பு 3.

குறித்த வேளையில் எவ்வித தடையுமின்றி பசளைகள் விநியோகிக்கப்படும்.

# எல்லைத்தகராறில் சோவியத் போக்கில் மாற்றம்?

## “விவேகானந்தர் உபதேசம் இச்சமயத்தில் தனிச்சிறப்புற்றது”

### நூற்றாண்டு விழாவில் நேரு கருத்து

### கொழும்பு மகாநாட்டு யோசனைகளுக்கு இந்திய எதிர்க்கட்சிகள் சில எதிர்ப்பு

புதுடில்லி, ஜன. 18

“இந்தியாமீது சீன ஆக்கிரமிப்புச் செய்துள்ள இந்த நேரத்தில் சுவாமிவிவேகானந்தரின் உபதேசங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. சுவாமி விவேகானந்தரின் தேசப்பற்று, வீரம், துணிவு, ஆற்றல் நமக்குத் தேவை” என்று பிரதமர் நேரு நேற்றுமாலை புதுடில்லியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் நூற்றுண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

### உறுதியும் பலமும் அவசியம்

போர் நிறுத்தம் இருந்த போதிலும் கொழும்பு மகாநாட்டு யோசனைகளின் முடிவு எப்படியிருந்தபோதிலும் நமக்கு உறுதியும் பலமும்தான் அவசியம். நம்மை நாமே பலப்படுத்தி எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று பிரதமர் நேரு கூறினர். எந்த நாட்டு மக்களுடனும் சீன மக்களுடனும் கூட நாம் வெறுப்போ கெட்ட எண்ணமோ கொள்ளக்கூடாது. வெறுப்பு பலவீனத்துக்கு அடையாளம் என்று நேரு சொன்னர். கொழும்பு மகாநாட்டு யோசனைகளுக்கு நமது கருத்துக்களை ஓரளவுக்கு இலங்கை ஐக்கியஅரபுக் குடியரசு, கானு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துவிட்டதாகவும் பார்லிமெண்ட் விவாதித்துச் செய்யும் முடிவு இறுதியாகத் தெரிவிக்கப்படும் என்றும் பிரதமர் நேரு கூறினர்.

### எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனை

கொழும்பு மகாநாட்டு யோசனைகளையும் இலங்கை, ஐக்கியஅரபுக் குடியரசு, கானு ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளுடன் கொழும்பு மகாநாட்டு யோசனை சம்பந்தமாகத் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளையும் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்கு முன்னல் பார்லிமெண்டிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதாக பிரதமர் நேரு தம்மிடம் தெரிவித்ததாக பார்லிமெண்டிலுள்ள சுயேச்சை அங்கத்தவர் ஒருவர் பிரதமரைச் சந்தித்துப் பேசியபின் தெரிவித்தார்.

### இருகட்சி எதிர்ப்பு கம்யூனிஸ்ட் ஆதரவு

கொழும்பு மகாநாட்டு யோசனைகளின் அடிப்படையில் சீனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை சுதந்திரக்கட்சி ஜனசங்கக்கட்சித் தலைவர்கள் எதிர்த்துள்ளனர். இந்தியா மீது இரண்டாவது பெரிய தாக்குதலை நடத்துவதற்குத் தயார் செய்யப் போர்நிறுத்த காலத்தை சீன பயன்படுத்திக் கொண்டிருப்பதாக ஜனசங்கத் தலைவர் டாக்டர் ரகு வீரா கூறினர். எல்லாப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்பு பூரணமாக நீங்கினலன்றி சீனவுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாதென்ற ஜனசங்கத்தின் போபால் தீர்மானத்தில் மாறுதல் இல்லையென்று அவர் சொன்னர். கொழும்பு மகாநாட்டு அடிப்படையில் சீனவுடன் பேச்சு நடத்துவதை எதிர்ப்பதற்காக பார்லிமெண்ட் கூடும் சமயத்தில் தாமாகவோ அல்லது மற்ற ஜனநாயக எதிர்க்கட்சிகளுடனே ஜனவரி 20-ந் திகதி பொதுக்கூட்டங்களை நடத்துமாறு நாட்டிலுள்ள சுதந்திரக்கட்சிக் கிளைகளை எல்லாம் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. எம். ஆர். மஸானி கேட்டுக் கொண்டுள்ளார். தேசத்துக்கு நாசத்தையும் இழிவையும் உண்டாக்கிய பழைய பிரமைகளுக்கும் விட்டுக்கொடுக்கும் கொள்கைகளுக்கும் நாம் திரும்பிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது என்று திரு. மஸானி கூறினர். இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மத்திய கமிட்டி இந்திய-சீன எல்லைத் தகராறு சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளையும் கொழும்பு மகாநாட் யோசனைகள் சம்பந்தமக்க அரசாங்கம் அணுகும் முறைகளையும் ஆதரித்துள்ளது. காஷ்மீர் சம்பந்தமான ஒருதீர்மானத்தில் காஷ்மீர் இந்திய யூனியனில் ஒருபகுதியாக உள்ளதென்றும் இதுசம்பந்தமாக இனிப்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இடமில்லையென்றும் கூறியுள்ளது.

### சோவியத் போக்கில் மாற்றம்

இந்திய-சீன எல்லைத் தகராறு சம்பந்தமாக இதுவரை நடுநிலைமை வகித்துவந்த சோவியத் யூனியனின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் திரு. ஊல்பிரைட்டரும், திரு. குருஷ்சேவும் நிகழ்த்திய உரையிலிருந்து அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் இது பற்றி வெளிப்படையாக எதுவும் குறிப்பிடவில்லையாயினும் கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஊல்பிரைட் முன்னரே எழுதித் தயாரித்து, மாஸ்கோவின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்த உரையை நிகழ்த்துகையில், இதர கம்யூனிஸ்ட் [illegible]நிகளுடன் கலந்தாலோசனை செய்யாமலும் தகவல் தெரிவிக்காமலும் இந்தியாவுடன் எல்லைச் சண்டையை ஆரம்பித்ததற்காக கம்யூனிஸ்ட் சீனவைக் கண்டித்தார். திரு. ஊல்பிரைட்டின் உரை சோவியத் யூனியனின் போக்கிலும் மாற்றம் ஏற்படுத்தியிருப்பதைக் குறிப்பாகக் கருதப்படுகிறது.

### அணுஆயுத போருக்கு சீன அஞ்சவில்லை

அணுஆயுத யுத்தத்துக்குச் சீன அஞ்சவில்லை என்று இந்தியப் பிரதமர் நேரு ஒருபேட்டியில் தெரிவித்ததாக அமெரிக்கப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிலவருடங்களின் முன்பு தாம் நவசீன அதிபர் மா-ஸே-துங்கைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது அணு ஆயுத யுத்தம்பற்றித் தாம் சிறிதும் கவலைப்படவில்லையென்று மா-ஸே-துங் தெரிவித்ததாக இந்தியப்பிரதமர் கூறினரென்று அந்தப்பத்திரிகைச்செய்தி கூறுகிறது.

## தென்னுபிரிக்கா மீது தடை நடவடிக்கை

### பாதுகாப்புச் சபைக்கு யுதாண்ட் கோரிக்கை

நியுயோர்க், ஜன. 18

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடச் சொல்வதற்கு தென்னுபிரிக்காமீது தடை நடவடிக்கை உட்பட சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபையை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கேட்டுள்ளார்.

சென்ற வருடம் நவம்பர் மாதம் ஐ. நா. மகாசபை நிறைவேற்றிய தீர்மானத்துக்கிணங்கவே தலைமைக் காரியதரிசி இவ்வாறு கேட்டுள்ளார்.

தென்னுபிரிக்கா தனது இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடச் செய்வதற்கு ஐ. நா. உறுப்பு நாடுகள் தென்னுபிரிக்காவுடனுள்ள ராஜீயத் தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ளவேண்டுமென்றும் தென்னுபிரிக்கப் பண்டங்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் தென்னுபிரிக்க விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் துறைமுக விமான நிலைய வசதிகள் அளிக்கப்படக் கூடாதென்றும் நவம்பர் மாதம் ஐ. நா. மகாசபை நிறைவேற்றிய தீர்மானத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## பாக். — இந்திய பேச்சு நீடிப்பு

புதுடில்லி, ஜன. 18

காஷ்மீர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட இதரபிரச்னைகள் சம்பந்தமாகவும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மந்திரிகள் கட்டத்தில் சென்ற புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமான பேச்சுவார்த்தை இன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் இருதரப்பு ஆலோசகர்களும் கூடிப் பேசியபின் மந்திரிகளிருவரும் மீண்டும் சந்தித்து அரைமணி நேரம் தனிப்பட்ட முறையில் பேசினர்.

இன்று காலையிலும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. பேச்சுவார்த்தைகள் சிநேகபாவத்துடன் நடைபெற்றதாக ஒரு அதிகாரி தெரிவித்தார்.

---

## ரூ. 10 லட்சம்

### பாரதத்துக்கு மலாயா அனுப்பியது

கோலாலம்பூர், ஜன. 17

மலாயாப்பிரதமர் திரு. துங்கு அப்துல் ரகுமான், பாரதப் பிரதமர் நேருவுக்கு பத்துலட்சம் ரூபாய் கொண்ட காசோலையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது சம்பந்தமாக மலாயா அரசாங்க அதிகாரியொருவர் தெரிவிக்கையில், இந்திய பாதுகாப்பு நிதிக்காக மலாயா ஆரம்பித்துள்ள பாதுகாப்பு நிதியின் முதல் நிதியாக ரூ. 10 லட்சம் அனுப்பப்படுகிறதென்று கூறினர்.

---

## மேற்கு ஜெர்மன் மேயர்

### குருஷ்சேவை சந்திக்கமாட்டார்

பெர்லின், ஜன. 18

சோவியத் பிரதமர் குருஷ்சேவை மேற்கு பெர்லின் மேயர் திரு. வில்லிபிராண்ட் கிழக்கு பெர்லினில் சந்திப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் இது பின்னர் ரத்துச்செய்யப்பட்டுவிட்டது. சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவின் அழைப்பின்பேரில் அவரைக் கிழக்கு பெர்லினில் சந்திப்பதற்கு மேயர் வில்லிபிராண்ட் ஒப்புக்கொண்டிருந்தார்.

திரு. குருஷ்சேவை திரு. வில்லிபிராண்ட் சந்திப்பதை மேற்கு நாடுகள் ஆட்சேபித்ததாகவும் மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. கொன்ட்ராட் அடினர் கடுமையாக எதிர்த்ததாகவும் தெரிகிறது.

## அவகாசம் இன்னும் உண்டு!

### சீன கம்யூனிஸ்டுக்கு கோமுல்கா புத்திமதி

பெர்லின், ஜன. 18

சீன கம்யூனிஸ்டுகள் தங்களது பாதகமான கருத்தை மாற்றிக்கொள்ள இன்னும் அவகாசம் இருக்கிறது என்று போலந்து கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கோமுல்கா கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் நேற்று பேசுகையில் குறிப்பிட்டார்.

சீன கம்யூனிஸ்டுகள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதாக திரு. கோமுல்கா குற்றம் சாட்டினர். திரு. கோமுல்கா பேசுவதற்கு எழுந்ததும் சீன, கொரிய, வட வியட்நாம் பிரதிநிதிகள் தவிர, இதர பிரதிநிதிகள் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

அல்பேனிய கம்யூனிஸ்டுகள்பற்றிக் குறிப்பிட்ட திரு. கோமுல்கா அவர்கள் நிதானத்துடனும் விவேகத்துடனும் நடந்துகொள்வது நல்லதென்று கூறினர்.

---

## அமெரிக்க குடும்பம்

### சராசரி உணவுச் செலவு

வாஷிங்டன், ஜன. 17

சராசரி அமெரிக்க குடும்பம் 1962-ல் அதற்கு முந்தின வருடங்களில் செலவழித்ததை விடச் சிறிது அதிகமாக உணவுக்காகச் செலவிட்டது. ஆயினும் வரிகள் செலுத்த வேண்டியது போக நிகர வருமானத்தில் 19 சதவிகிதமே உணக்காகத் தேவைப்பட்டது. இது, வேறெந்த தேசத்திலாகட்டும் சரித்திரத்தில் எந்தக்காலத்திலாகட்டும் ஒரு சராசரி குடும்பம் உணவுக்காகச்செலவிடும்சதவிகிதத்தை விடக் குறைவானது என்று அமெரிக்க விவசாய இலாகா அறிவித்துள்ளது.

---

## பிரிட்டனுக்கு சீன ஆட்சேபம்

பீக்கிங், ஜன. 18

ஹாங்காங்கிற்குஅருகிலுள்ள கோலூன் என்ற பழைய பட்டினத்தை அழிப்பதென்ற பிரிட்டனின் தீர்மானத்தை எதிர்த்து சீன அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

### பொன் வாக்கு

வாலிபர்கள் முதலில் வலுவுடையோராக இருத்தல் அவசியம். அதற்கு மேல்தான் சமய வழிபாடு. கீதையின் ஒரு சுலோகத்தை ஜபித்து இறைவனை நினைப்பதைக் காட்டிலும் உடற் பயிற்சியின் போது நாம் இறைவனை மிக அணுகி நிற்கிறோம். அப்பொழுது இறைவனை உணர்ந்துகொள்ளும் நிலை ஏற்படுகின்றது.

— சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 6௳ (19-1-63)


## கிராம சேவகர்கள் நியமனம்

புதிதாகத் தெரிவு செய்யப்பெற்ற கிராம சேவகர்களைப் பற்றி இங்கு நாம் எழுதிய போது அவர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதால் லஞ்சம் முதலிய ஊழல்கள் இனி ஏற்படக் காரணமில்லையெனக் குறிப்பிட்டிருந்தோம். எழுதிய மை உலர முன்னர் கிராமசேவகர்கள் நியமனம் பற்றி பலஊழல்கள் நடைபெற்றிருப்பதாக தென்னிலங்கையில் ஆட்சேபங்கள் கிளப்பப்பட்டுள்ளன.

இந்தப் புகாரில் ஏதேனும் உண்மையிருக்குமாயின் இதைப் போன்ற வெட்கக்கேடான செயல் வேறெதுவுமில்லையென்றே கூறவேண்டும். ஊழல்களுக்கோ, அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கோ இடமில்லாதவகையில் புதிய கிராம சேவகர்களின் சேவைஅமைய வேண்டுமென அரசாங்கம்விரும்பியது. ஆனால் கிராம சேவகர்களை நியமனம் செய்தமுறையே கண்டனத்துக்குள்ளாகியிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது.

கிராம சேவகர்களை நியமனம் செய்வதில்தானும் எவ்வளவோ தாமதம் ஏற்பட்டதை நாம் அறிவோம். இத்தாமதத்துக்கு அரசியல் தலையீடு காரணமாக இருக்கலாம் என்ற கருத்து நாட்டில் காலூன்றியது. ஈற்றில் கிராம சேவகர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் வெளியானபோது பரீட்சை எழுதாதவர்களின் பெயர்கள்கூட அப்பட்டியலிற் காணப்பட்டதாம்.

இது உண்மையாயின் இந்த அற்புதம்எப்படி நிகழ்ந்ததென்பதை அறிய மக்கள் விரும்புவது இயல்பே. அதுவும் அரசாங்க பொதுசேவைக் கமிஷன்செய்த நியமனத்தில் ஊழல்கள் ஏற்பட இடமளிப்பது பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பங்கம் விளைப்பதாகும்.

கிராம மக்களின் நம்பிக்கையையும்மதிப்பையும்பெறவேண்டிய கிராமசேவகர்களின் நியமனம் ஆரம்பத்திலேயே ஊழல்கள் நிறைந்ததொன்றாக இருப்பதால் இந்நியமனம் சம்பந்தமான சகல புகார்களையும் பரிசீலனை செய்யுமாறு கைத்தொழில் உள்விவகார அமைச்சர் தமது அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. ஆட்சேபங்கள் அனைத்தையும் நன்கு பரிசீலனைசெய்து கிராம சேவகர்களின் நியமனத்தில் நேர்மையையும், திறமையையும் கடைப்பிடிப்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

# போர் தொடுத்த சீனா தயங்கி நிற்பதேன்?

**சீனாவின் தற்காலிக போர் நிறுத்தத்தின் உள்நோக்கம் என்ன? லூயிஸ் ஹலாஸ் எழுதியுள்ள இக்கட்டுரையை படியுங்கள்.**

இந்தியாவின் இமாலய எல்லைப் பிரதேசங்களில் சென்ற அக்டோபர் மாத இறுதியில் சீனா ஒரு விரிவான தாக்குதலை மேற்கொண்டது. நவம்பர் மாதம் 20-ம் திகதி இதைவிட விரிவான முறையிலும், ஆச்சரியப்படும் வகையிலும் சீனர்கள் போர் நிறுத்தத்தை அறிவித்ததோடு, டிசம்பர் முதல் திகதி சீனத் துருப்புக்கள் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் திகதி இருந்த நிலைக்கு 12 மைல் பின்னால் வாபஸ் பெறுவர்கள் என்று தெரிவித்தனர்.

சீன-இந்தியப் போர் ஐ.நா. விற்கு வரும் சாத்தியம் இல்லை. ஐ. நா. விற்கு கொண்டு செல்வதை இந்தியர்களும் விரும்பவில்லை. ஏனெனில், ஐ. நா. வின் சமாதான முயற்சியின் இடையே சீனர்கள் இந்தியாவில் ஆக்கிரமித்ததை விஸ்திரப் படுத்திக்கொள்ள ஏதுவாகிவிடும். இதே காரணத்தினால்தான் சீனர்களின் தற்காலிக போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ள இந்தியா மலைக்கிறது. சீனா வாபஸ் பெற ஒப்புக்கொண்டிருக்கிற நிலைக்கும், இந்தியா நிபந்தனை விதிக்கும் நிலைக்கும் இடைப்பட்ட 12,000 சதுரமைல் நிலப்பரப்பை பணயம் வைத்து சீனர்களுடன் போர் நிறுத்தம் செய்து கொள்வதை இந்தியா விரும்பவில்லை.

இந்தியா தன் வழக்கை ஐ. நா. விற்கு எடுத்துச் சொல்லவில்லை என்றாலும், அதன் தூதர் சக்கரவத்தி டெலிவிஷன் பேட்டியில் இந்தியாவின் கருத்துக்களை கூற முன்வந்தார். "மற்ற சுதந்திரம் அடைந்த நாடுகள் இந்தியாவின் வாழ்க்கை முறையையே பின்பற்ற விரும்புவதால் சீனர்கள் எங்களின் வாழ்க்கை முறையை நாசப்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள்" என்றார் திரு. சக்கரவர்த்தி. சீனாவின் போர் நிறுத்தம், இந்தியா மற்ற நாடுகளிடமிருந்து ஆயுத உதவி பெறுவதை தடை செய்வதற்காகவே மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் கூறினார்.

சீனா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தங்கள் பூமியை மீட்பதற்கு இந்தியர்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இவ்வளவுக்கிடையிலும் கராச்சி சீனாவின் நடுவலைக் கண்டிக்கவில்லை. மாறாக, இந்தியாவுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பதை அது கண்டிக்கிறது. சீனாவுக்கு, தான் விரும்பும் நிலத்தைப் பற்றிக் கொள்வதைத் தவிர இந்தியாவையே தாக்கும் நோக்கம் இல்லை என்றும் அதனால், அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கும் ஆயுதங்களை தன் மீது பிரயோகிக்கலாம் என்றும், பாகிஸ்தான் கூறுகிறது. ஆனால் சீனாவின் இந்த ஆக்கிரமிப்பு இந்தியாவையே அது எதிர்க்கத் திட்டம் போட்டிருப்பதன் ஆரம்பம்தான் என்று இந்தியா கூறுவதை பெரும்பான்மையான பார்வையாளர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். திரு. சக்கரவத்தி கூறியது போல் "சீனர்கள் இந்தியர்களின் தலை மீது உட்கார்ந்துகொண்டு அவர்களின் விருப்பம்போல் ஆட்டிவைப்பார்கள்."

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தகராறுக்குட்பட்டிருக்கும் பிரதேசம் மேற்கு லடாக்கும், கிழக்கே வட கிழக்கு எல்லைப் பிரதேசமும் ஆகும். சுமார் 15,000 சதுர மைல் பரப்பளவு நிலத்தின் மீதுதான் இந்தப் பிரச்சனை தொங்கி நிற்கிறது. திபெத்தையும், சீனாவையும் இணைக்கும் அக்சாய் சின் சாலை வடக்கில் இருப்பதால், லடாக் சீனாவிற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால் வட கிழக்கு எல்லைப் பிரதேசத்தின் கதையே வேறு, இங்கு, இந்தியா வற்புறுத்தும் மக்மோகன் எல்லைக் கோட்டை சீனா ஏற்க மறுக்கிறது. சமீபத்தில் சீனா இங்குதான் திட்டமிட்ட ஒரு தாக்குதலை நடத்தியது. அஸ்ஸாம் சமவெளியும் அதன் எண்ணெய்கிணறுகளும் இதற்கு சமீபத்தில்தான் இருக்கின்றது. அஸ்ஸாமை ஆக்கிரமித்து விட்டால், அகில இந்தியா மீதும் ராணுவத் தாக்குதல் நடத்துவது மிகவும் சுலபமானதாகிவிடும்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் போர்நடைபெறலாம் என்னும் நினைப்பே திகிலை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், இதனால் உலக ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் பாதிக்கப்படுவார்கள். இந்தப் போரில் ரஷ்யாவும், மேற்கு நாடுகளும் பங்கேற்றுக் கொள்ள வேண்டி வந்துவிடும். சீனாவின் தற்காலிக போர் நிறுத்தத்தின் உண்மையான உருவத்தை தெரிந்து கொள்வதற்கு உலகம் காத்திருக்கிறது. எல்லைப் போர் குறித்து இந்தியாவே ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் நம்புகின்றன. ஒரு நடுநிலை நாட்டின் வாழ்வே அந்தரத்தில் நிற்கும்போது, நடுநிலை நாடுகள் நேருவுக்கும் தார்மீக ஆதரவு கொடுப்பதற்குக்கூட இன்னமும் முன்வரவில்லை. பல நடுநிலை நாடுகள் சீனாவின் போர்நிறுத்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்தியாவை இப்போது வற்புறுத்திவருகின்றன.

இரத்தினக் கம்பளம்

## முட்டை விவகாரம்!

பதுமன்

எங்கள் வீட்டுச் சேவல் அடுத்த வீட்டிலுள்ள வைக்கோல் போருக்குள் முட்டையிட்டால் அந்த முட்டை யாருக்குரியது? இப்படி இளைஞர்களின் பொது அறிவைப் பரீட்சிப்பதற்குப் பல கேள்விகளை ஆசிரியர்கள் கேட்பதுண்டு. இக்காலத்தில் கோழியில்லாமலே குஞ்சு பொரிக்கும் அற்புதம் நடைபெறுவதால் பிள்ளைகளுக்குச் சேவலைப்பற்றியோ கோழியைப்பற்றியோ எந்த விதமான சிரத்தையும் இருக்கப் போவதில்லை.

கோழி முட்டை போடுகின்றதென்பது உண்மைதான் ஆனால் சட்டப்படி முட்டையை உற்பத்தி செய்வதுயார்? கோழிக்குச் சொந்தமானவர்தான் முட்டையை உற்பத்தி செய்கின்றவர் என இங்கிலாந்தைச் சேர்ந்த எடின்பரோ உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அப்பீல் வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

கோழியை அறுத்து உரித்துச் சுத்தம் செய்யும் ஒரு கம்பெனியானது "முட்டை உற்பத்தியாளர்எனப் பதிவுசெய்து கொள்ளத்தவறிய காரணத்துக்காக அரசாங்கம் அந்தக் கம்பெனிமீதுவழக்குத்தொடர்ந்தது. கீழ்க்கோர்ட்டில்கம்பெனி குற்றவாளியெனக் காணப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தக் கம்பெனி தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல்செய்தது.

"நாங்கள் கோழியை உணவுக்காகத் தயார்செய்து விற்கின்றோம். கோழியை அறுப்பதற்கு முன்னர் அவைகளிற் சில முட்டையிடுகின்றன. ஒரு வாரத்தில் இந்த வகையில் சுமார் நூறுமுட்டைகள் சேர்ந்துவிடுகின்றன முட்டையை உற்பத்திசெய்ய நாங்கள் எண்ணவில்லை. அது எங்கள் தொழிலுமல்ல கோழிகள் தாம் முட்டையிடுகின்றன". இவ்வாறு கம்பெனியின் சார்பில் வாதாடப்பட்டது.

ஆனால் லண்டன் நீதிபதிகள், வழக்கறிஞர்களின் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை கோழிக்குச் சொந்தக்காரர்கள் தாம் முட்டையை உற்பத்தி செய்கின்றவர்கள் என அவர்கள் தீர்ப்பளித்தனர்.

### கோழி மேய்த்தல்

'கோழி மேய்த்தாலும் கோறனமேந்திலே மேய்க்க வேண்டு'மென்று எங்கள் நாட்டிலே சொல்லுவார்கள் அரசாங்க உத்தியோகத்துக்குள்ள மதிப்பையும் சேவைப் பாதுகாப்பையும் எடுத்துக்காட்டுவதுபோல இந்த 'உபதேசம்' அமைந்திருந்தது. இப்போது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் கோழிப்பண்ணைகளை ஏற்படுத்த நல்ல வருவாயை ஈட்டிவருகின்றனர். பலர் அரசாங்கப்பதவிகளுக்கு இருந்த மதிப்பு இன்று மங்கி வருகின்றதென்பதற்கு கோழி பண்ணை ஏற்படுத்துவதில் உள்ள ஆர்வத்தையும் குறிப்பிடலாம்.

படித்த வாலிபர்கள் பலர் விவசாயத்துறையில் ஊக்கத்துடன் உழைத்து வருவதைப் பார்க்கும்போது, தொழிலின் மகத்துவத்தை அனைவரும் இப்போது உணரத் தொடங்கி விட்டனர் என்றே கூறவேண்டும். பேறு ஓட்டும் தொழிலிற் காணாத சுகத்தையும் நிம்மதியையும் சுதந்திரமான வேறு தொழில்களில் இன்று பலரும் அனுபவித்துவருகின்றனர்.

### சுதந்திர யாத்திரை

சாத்விக முறையில் உலகிலே சமாதானத்தை நிலைநாட்டப் பாடுபட்டுவரும் உலக சமாதானப் பேரணியின் ஆதரவில் இந்தியாவிலிருந்து பீகிங் நகருக்கு ஒரு 'சுதந்திரயாத்திரை' மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த யாத்திரை மிகக்கடினமானதொன்று எனவே, சகல ஏற்பாடுகளும் பலமாயிருக்கவேண்டுமெனப் பேரணியின் சக-தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கருதுகின்றார்.

### மலாயா அன்பர்

மலாயாவில் 'ஈழநாடு' இதழ்களை ஆவலுடன் படித்துவரும் அன்பர்களில் ஒருவரான திரு. வேலுப்பிள்ளை இப்போது தமது சொந்த ஊராகிய காரைநகரில் விடுமுறையைக் கழித்து வருகின்றார் 'ஈழநாடு' நன்கு வளர்ச்சியுற்றுச் சிறந்த பத்திரிகையாகத் திகழவேண்டுமென்பது அவருடைய ஆசை தமிழ்ப் பேசும் மக்களின் வர்த்தக நிலையங்கள் விளம்பரங்களைத் தாராளமாக உதவினால் இப்பத்திரிகைக்கு அவை பசளைபோல் அமைந்து நல்ல விளைச்சலைக் கொடுக்குமென அவர் சுவையாகக் கூறினார்.

அன்பர் வேலுப்பிள்ளைக்குப் பத்திரிகைகளைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது. மேலநாட்டுச் சிறந்த பத்திரிகைகளைப்பற்றி அவர் நன்கு அறிந்திருக்கின்றார். அதேபோல் இந்தியா இலங்கைபோன்ற இடங்களிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளின் வளர்ச்சியையும் அவர் கவனித்துக்கொண்டு வருகின்றார் மலாயாவிலுள்ள தமிழ்மக்களிடையே இப்போது தமிழ் ஆர்வம் மிகுந்துள்ளதெனவும் அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

## அனுமார் தமிழில் பேசினாரா?

அலகபாத், ஜன. 17

இலங்கையில் அசோகவனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையுடன் இராமதூதரான அனுமார் தமிழில் பேசினார் என்று தமிழ் நாட்டு மக்கள் உரிமை கொண்டாடுவதாக மஹாராஷ்டிரமுன்னாள் கவர்ணர் ஸ்ரீ பிரகாசா இங்கு கூறினார்.

அனுமார் தன்னுடைய மொழியில் பேசினால் சீதைக்கு விளங்காமல்போகும் என்று நினைத்தார். வடமொழியில்பேசினாலோ வடமொழில் வல்லுனரான இராவணனின் ஆள் என்றுஐயுற்றுவிடலாம். ஆகவே தமிழ் மொழியிற் பேசுவதே சிறப்பென அவர் கருதியதாக தமிழ் நாட்டிற் கதை நிலவுகிறது.

இந்த உரிமை எந்த அளவுக்குச் சரியானதென்பதை இந்திய மொழி அறிஞர்கள் ஆயாயவேண்டுமென ஸ்ரீ பிரகாசா மேலும் பேசுகையிற் கேட்டுக் கொண்டார்.

## மூவர்ணக்கொடி அமைத்தவருக்கு பாராட்டு

விஜயவாடா, ஜன. 17

காங்கிரஸ் கட்சியின் மூவர்ணக் கொடியை அமைத்துக் கொடுத்த 84 வயதான திரு. பிங்காலி வெங்கட்ராமையாவுக்கு இங்கு பாராட்டுத்தெரிவிக்கப்பட்டது இவ்விழாவுக்கு ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் திரு. பிரம்மய்யா தலைமை தாங்கினார். வரவேற்புக்குழுவின் சார்பாக திரு. வெங்கடராமய்யாவுக்கு ரூ. 2000 கொண்ட பணமுடிப்பு வழங்கப்பட்டது.

### வாழ்க்கைக் குறிப்பு

விடுதலைக் காலத்தில்'வந்தே மாதரம்' இயக்கத்துடன் திரு. வெங்கையா நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இந்திய தேசியக் கொடியை அமைக்க வேண்டுமென்பதில் அவர் பெரும் பகுதி நேரம் எடுத்துக்கொண்டார். 1921-ம் ஆண்டில் விஜயவாடாவில் காங்கிரசுக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது காந்தியடிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு. வெங்கையா மூவர்ணக்கொடியை அமைத்தார். அதுவே காங்கிரஸ் கொடியாக ஏற்றுக்

(5ம் பக்கம் பார்க்க)

# காணுமற்போகும் பதிவுத் தபால்கள்
## 1962-ல் அதிகமாம்

கொழும்பு, வெள்ளி

கடந்த வருடத்தில் 1,076 க்கு அதிகமான பதிவுத் தபால்கள் காணுமற் போனதென்றும் இதற்கு முந்திய வருடத்தில் சுமார் 300 பதிவுத்தபால்கள் காணுமற் போனதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தபால் இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், காணுமற்போன அதிகமான பதிவுத் தபால்கள் பெறுமதியானவையென்றும் தபாற்கந்தோர் சட்டத்தின் கீழ், இவைகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதென்றும் கூறினர்.

பதிவுத் தபால்கள் மற்றும் இன்சூரன்ஸ் செய்யப்பட்ட தபால்கள் ஆகியவை காணுமற் போவது குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக கடந்த வருடத்தில் ஆறுபேர் கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டதென்றும் அவர்கள் தெரிவித்த யோசனையின்படி தபால் இலாகாவில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் அவர் கூறினர்.

---

# அரவம் தீண்டி மரணம்

எல்பிட்டி, வெள்ளி

பினிகஹன என்ற இடத்தைச் சேர்ந்த ஜி. ஜி. ஜோன் அப்புஹாமி அரவம் தீண்டி மரணமானர்.

---

# போலந்து மந்திரி

மாஸ்கோ, ஜன. 18

புதுடில்லிக்கு வரும் வழியில் போலந்து வெளிவிவகார மந்திரி மாஸ்கோ வந்துசேர்ந்துள்ளார். அவர் நாளை புதுடில்லி போய்ச்சேருவார்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

# யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்கள்

யாழ்ப்பாணம் முனிசிபல் சபைக்கு இரு புதிய வட்டாரங்கள் உருவாக்கும் பத்திரிகை அறிவித்தலைச் சமீபத்தில் படிக்க நேர்ந்தது. ஒரு திட்டமின்றி இரண்டு புதிய வட்டாரங்களை அமைப்பது எப்படி என்று எனக்குப் புலப்படவில்லை. வட்டாரம் ஒன்றுக்கு சராசரி 2000 வாக்காளராக 21 வட்டாரங்களை வகுத்து அமைப்பது முனிசிபல் சபை விதிமுறையைத் தழுவியதாயும் ஜனநாயக ஒழுங்கு முறைக்குச் சார்புடையதாயுமிருக்கும்- பொதுத் திட்டங்களின் அடிப்படையில் வட்டாரங்களைப் பிரித்தமைக்கும்போது கரையோரப்பகுதி மக்கள், முஸ்லிம் சமூகத்தினர் ஆகியோருக்குக் காட்டப்பட்டுள்ள சலுகைகள் போல சாதிப் பிரிவினை காரணமாகப் பின் தங்கிப் போயிருக்கும் மக்களுக்கும் சலுகைகள் செய்து அதற்குத் தகுந்தாற்போல வட்டாரங்களை அமைக்கவேண்டியது அவசியமாகிறது. இது சம்பந்தமாக நகரமேயர் முனிசிபல் சபை அங்கத்தினர்களையும் மற்றும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, திருவள்ளுவர் மகாசபை, மக்கள் முன்னேற்ற மன்றம் போன்ற சமூகப் பொது ஸ்தாபனங்களையும் அவசியம் கலந்தாலோசிப்பாரென நம்புகிறேன்.

உத்தேசமாக மூன்று, பதின்நான்கு, ஆறும் வட்டாரங்களில் மூன்று புதிய வட்டாரங்களை மேலும் பின் தங்கிப்போன சமூகத்தினருக்காக உருவாக்கித் தரலாம்.

எல்லோருக்கும் சம நீதியும் ஜனநாயகப்பிரதிநிதித்துவமும் கிடைக்கக்கூடியதாக வட்டாரங்களை ஒரு பொதுத் திட்டப்படி பிரித்தமைத்தாலே அப்பொழுது அது வரவேற்கக் கூடியதாயிருக்கும்.

சி. கதிரவேற்பிள்ளை
யாழ்ப்பாணம்.

# தனிச் சிங்களச்சட்டத்தில் 'மனச்சாட்சி'எங்கேஇருக்கிறது?
## பீலிக்ஸ் கூற்றுக்கு டாக்டர் நாகநாதன் மறுப்பு

கொழும்பு, வெள்ளி

மொழிப்பிரச்சினை பற்றியும் இலங்கையில் வசிக்கும் தமிழரின் இன்றைய நிலைபற்றியும் இலாகா இல்லாத அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா இந்தியக் கவுன்சிலின் கூட்டமொன்றில் பேசியது குறித்து தமிழரசுக் கட்சியின் பொதுக்காரியதரிசி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர்.

"அவர் எடுத்துக் காட்டிய ஐந்து அம்சங்களில் ஒவ்வொன்றுமே ஒன்றில் உண்மையை முற்றுக மறப்பதாகவோ அல்லது உண்மையைத் திரித்துக் கூறுவதாகவோ உள்ளது" என்பதாக டாக்டர் நாகநாதன் கூறுகின்றுர்.

இது பற்றி அவர் மேலும் சொல்லியிருப்பதாவது:-

சிங்களத்தை இந்நாட்டின் ஒரே அரசகரும மொழி ஆக்கியவர்கள் தங்கள் சொந்த மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலே அவ்வாறு செய்திருக்கிறுர்கள் என பீலிக்ஸ் கூறியதை முதலில் எடுத்துக் கொள்ளலாம். இரு தேசிய மொழிகளுக்குமே சமஅந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்பதைக் கொள்கையளவில் எல்லா சிங்களத்தலைவர்களும் அரசியல் கட்சிகளும் பிரதிநிதிகள் சபைக்குள்ளாகவும் அதற்கு வெளியேயும் 1956-ம் ஆண்டுவரை ஒப்புக்கொண்டே வந்திருக்கின்றனர். 1956 முகலாக அவர்களது மனேபாவமே அடியோடு மாறிப்போய் விட்டது. தீவிர எதிர்ப்புக்கு மத்தியில் சிங்களமொழி தமிழ் மக்கள் மீதும் மற்றைய சிறுபான்மை இனத்தினர் மீதும் இந் நாட்டின் ஒரே ஒரு அரசாங்க மொழியாக வலுக்கட்டாயத்தின் பேரில்- திணிக்கப்பட்டது. பிரதிநிதிகள் சபையில் இனசார்புடைய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தனிச்சிங்களச் சட்டம் நடைமுறைக்கு வந்தது."

பத்துப்பேரில் எட்டுப்பேர் சிங்களவராயிருக்கிறுர்கள் என பீலிக்ஸ் இலங்கையின் ஜனத்தொகையைக் கணக்குப் போட்டதையும் டாக்டர் நாகநாதன் மறுத்து "இவர்களின் எண்ணிக்கை பத்துப் பேருக்கு ஏழு பேர் தான். சரியாகச் சொன்னுல் ஏழுபேருக்கும் சற்றுக்குறைவாகவே இருக்கும். தமிழரின் எண்ணிக்கை நூறுபேருக்கு இருபத்தொன்து பேர்" என்றுர்.

சென்ற பதினைலு ஆண்டுகளாக அரசாங்க சேவையிலும் அரசாங்க கட்டுப்பாடுள்ள ஸ்தலஸ்தாபன சேவை போன்ற மற்றும் துறைகளிலும் தமிழர் வேலை நியமனம் பெறுவது எவ்வளவோ குறைந்து வந்திருக்கிறதென்றும் இன்னும் ஏழு ஆண்டில் இந்த எண்ணிக்கை நூறு பேருக்கு ஒருவர் என்று ஆகிவிடுவது கூட முற்றிலும் சாத்தியமே எனவும் டாகடர் நாகநாதன் கூறினர். சமீபத்தில் ராணுவத்துக்கு 500 பேர் திரட்டப்பட்டதை அவர் குறிபிட்ட போது "அதில் இரண்டு பேர் தான் தமிழர்" என்றுர்.

தனிச் சிங்களச் சட்டம் வருவதற்கு முன்பாக அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களையும் 'பிந்தி முளைத்த கொம்பு' துன்பப்படுத்துவதை டாக்டர் நாகநாதன் குறிப்பிட்டபோது "அவர்களுக்கு நியாயப்படி கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு ஆகியவற்றை இவர்கள் இழந்து போய் வருவதைச் சுட்டிக்காட்டினர். கல்வித்தகுதி தராதரம் என்று அரசாங்க சேவை நியமனத்துக்கு முக்கியமாகக்கணிக்கப்பட்டு வந்த அம்சங்கள் காற்றேடு போய்விட்டன. ஏதேதோ சொல்லி என்னென்னவோ செய்கிறுர்கள்" என்று டாக்டர் நாகநாதன் வருத்தத்தோடு கூறினர்.

---

# முவர்ணக்கொடி....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டது. அவரது பணியைப் பாராட்டி காந்தியடிகள் பின்வருமாறு எழுதினர்.

"நமது வாழ்வு—சாவுப் போராட்டத்திற்காக நாம் ஒரு பொதுவான கொடியை ஏற்றுக்கொண்டாகவேண்டும். மசூலிப் பட்டினத்தைச் சேர்ந்த திரு வெங்கையா பல ஆண்டுகளாகவே பலநாட்டுக் கொடிகளையும் விளக்கிக் கூறி நமது நாட்டிற்கென்று ஒரு கொடியையும் அமைத்து அதனை மக்களுக்குத் தெரிவித்துவருகிறுர். தேசியக்கொடி உண்டாக்குவது பற்றி அவர் கொண்டுள்ள கரைகாணுத ஆர்வத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். விஜயவாடாவில் நடைபெற்ற கூட்டத்தில் இவர் அமைத்த கொடி ஒன்றை அமைக்குமாறு நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். ஆனல் மூன்றே மணி நேரத்தில் நான் கூறியபடி கொடி ஒன்றை அமைத்து என்டம் கொடுத்துவிட்டார்.

# 500 தெருப் பாலங்கள்
## பழுதுபார்க்க வேண்டும்

கொழும்பு, வெள்ளி

பிரதான வீதிகளிலும் கிளைத் தெருக்களிலுமாக மொத்தம் 500தெருப் பாலங்கள் உடனடியாகப் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக பொது மராமத்து இலாகா போக்குவரத்து அமைச்சிடம் சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தப் பாலங்களில் பல, வெகு காலத்துக்கு முன் உருக்குக் கம்பிகளையும் செயற்கைப் பலகைகளையும் கொண்டு கட்டப்பெற்றதால் இன்று கூடுதலான பாரம் ஏற்றிச்செல்லும் வண்டி வாகனுதிகளின் உபயோகத்துக்கு நிலைநிற்க மாட்டாது விரைவில் பழுதடைந்துவிடுவதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொது மராமத்து இலாகா அதன் இவ்வாண்டு செலவினத் திட்டத்தில் தெருப் பாலங்களைச் செப்பனிடும் வேலைகளுக்கென்று 35 லட்சம் ருபாவை ஒதுக்கியுள்ளது.

---

# வர்த்தகத்தாபன பதிவாளருக்கு
## புதிய அதிகாரம் அளிக்க சட்டம்

கொழும்பு, வெள்ளி

வர்த்தக டிரெக்டரின் அதிகாரங்களையும், வேலைப் பொறுப்பு, மற்றும் உரிமைகளையும் வர்த்தகத்தாபன பதிவாளருக்கு மாற்றுவதற்கு வேண்டிய ஒரு சட்டத் திருத்த மசோதாவை உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின பிரதிநிதிகள் சபையில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

இந்த வர்த்தகக் கம்பனிகள் சட்டத்திருத்தம் பதிவாளர் எனப்படும் ரிஜிஸ்தார் வர்த்தக தாபனங்களிடமிருந்து அவசியமான விபரங்களை பெற்றுக்கொள்வதற்கும் ஓற்றும்அளவு வைத்துக்கொள்ளும் கணக்குப் புத்தகங்கள், இடாப்புகள் போன்றவற்றை வரவழைத்துப் பார்ப்பதற்கும் வைத்துக்கொள்ளவேண்டிய மேற்படி தஸ்தாவேஜுகளை வரையறுப்பதற்கும் பதிவாளருக்கு மேலும் அதிகாரம் அளிக்கிறது.

# "உதவித்தொழில் கமிஷனரை உடனே மாற்றவும்"
## யாழ். வர்த்தக ஊழியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் தற்போது பதவியிலிருந்துவரும் உதவித் தொழில் கமிஷனரை உடனடியாக வேறிடத்துக்கு மாற்றவும் அவருக்குப் பதில் தொழிலாளர்களிடத்தே அனுதாபமும் தாராளமனப்பான்மையும் காட்டக்கூடிய இன்னெருவரை நியமித்தனுப்பும்படியும் கோரி யாழ்பபாண வர்த்தக ஊழியர் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். பத்மநாதன் சிரேஷ்ட உதவித் தொழில் கமிஷனருக்கு ஒரு விண்ணப்ப மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

தொழிலாளருக்கும் முதலாளிமார்களுக்குமிடையே நல்லுறவை வளர்க்கக் கூடிய ஒரு நடவடிக்கையாக தொழிலாளர்களையும் முதலாளிமார்களையும் கொண்டதொரு கூட்டுச் சபையைத் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்டதொரு கால எல்லைக்குள் அமைக்க வேண்டியதன் அவசியத்தையும்தமது மனுவில் சங்கத்தலைவர் வற்புறுத்தியுள்ளார்.

வேலைத்தாபனங்கள் தினமும் மூடப்படும் நேரப்பிரமாணத்தை வலியுறுத்தி 1954-ம் வருஷ 19-வது இலக்க வர்த்தக அலுவலக ஊழியர் சட்டத்தை தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் குறித்த சட்டப் பிரமாணத்தை மீறும் முதலாளிகளுக்கு இப்போதுள்ளதை விடக் கூடுதலான தொகை அபராதமாக விதிக்கப்பட வேண்டுமென்றும் இம்மனுக் கோருகிறது. அதற்காக நிதி அமைச்சரைத் தொழில் அமைச்சர் சந்தித்துப் பேச வேண்டுமென்று மனுவில் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கடைச்சிப்பந்திகளுக்குக் குறைந்தபட்ச சம்பள விகிதம் ஒன்றைத் தொழில் அமைச்சர் கொண்டு வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுக்கு இரண்டாவது இடம்
## இலங்கைத் தேயிலை வாங்குவதில்

கொழும்பு, வெள்ளி

இலங்கைத் தேயிலையை வாங்கும் நாடுகளில் அமெரிக்கா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்காவில் அநேகமாக இலங்கைத் தேயிலையைத்தான் அங்குள்ள மக்கள் உபயோகிக்கிறுர்கள் எனத் தெரியவருகிறது.

கடந்த வருடத்தில் அமெரிக்கா 37,789,010 ரூத்தல் தேயிலையை இலங்கையிடமிருந்து வாங்கியுள்ளது.

இலங்கைத் தேயிலையை வாங்கும் நாடுகளில் பிரிட்டன் முதலிடம் வகிக்கிறது.

---

# பசளைக் கார்ப்பரேஷன் விரைவில் நிறுவனமாகும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கம், பசளைக் கார்ப்பரேஷன் ஒன்றை விரைவில் நிறுவத் தீர்மானித்துள்ளது. இதற்கென 2,500,000 ரூபாவையும் அது ஒதுக்கியுள்ளது. இத்தொகை கார்ப்பரேஷன் கட்டடம் கட்டுவதற்கும், அதற்கான நிலத்தை வாங்குவதற்கும் இயந்திர சாதனங்களை வாங்குவதற்கும் செலவிடப்படும்.

கார்ப்பரேஷன் தொடர்ந்து தொழிற்படுவதற்கு 4,500,000 தேவையாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்கார்ப்பரேஷன், பசளைகளை இறக்குமதி செய்து அவற்றை விநியோகிக்கும். முதன் முதலாக கார்ப்பரேஷன் 9,000 தொன் பசளையைப் பெற்று விநியோகம்செய்யும்.

# 20 ஆயிரம் புத்தகங்கள் கடலில் வீசப்பட்டன

கொழும்பு, வியாழன்

பொதுசன உபயோகத்துக்கு அருகதையற்றதென தடை செய்யப்பட்ட இருபதாயிரம் புத்தகங்கள் நேற்று சுங்கப் பகுதியினரால் நடுக்கடலில் வீசப்பட்டன. இவை அத்தனையும் அமெரிக்கப் பிரசுரங்களொன்றும் மொத்தம் இருபத்தைந்து வகைப்பட்ட பிரசுரங்களைக் கொண்ட இருபதாயிரம் பிரதிகளையும் இங்குள்ள ஒரு புத்தக வியாபாரிக்கு ஒரு பிரபல அமெரிக்க வெளியீட்டு நிலையம் அனுப்பியிருந்ததென்றும் தெரிகிறது.

சுங்கப்பகுதியைச் சேர்ந்த மிக வேகமாகச் செல்லும் 'ஜகரி' என்ற இயந்திரப் படகு இந்த ஆபாசக் களஞ்சியத்தை ஏற்றிக்கொண்டு துறைமுகத்துக்கு அப்பால் நாலு மைல் தூரத்துக்கு மின் வேகமாகச் சென்று கடலில் வீசிவிட்டுத் திரும்பியது.

---

# நிலக்குத்தகை நிர்ணயம்

கொழும்பு, வியாழன்

நெற்காணிச்சட்டப்படி அநுராதபுரம், மட்டக்களப்பு, மாத்தளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் குத்தகைக்கு நிலமெடுத்து நெல்செய்கைப்படுத்துவோர் ஏக்கர் ஒன்றுக்கு செலுத்தவேண்டிய குத்தகையை விவசாய இலாகா இப்பொழுதுநிர்ணயப்படுத்தியிருக்கிறது.

இதன்படி அநுராதபுர மாவட்டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ஆறுபுசல் நெல்லும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏருவூர் பற்று, கோரளைப்பற்று பிரதேசங்களில் ஏக்கருக்கு மூன்றரைப் புசல் நெல்லும் நிலக்குத்தகையாகச் செலுத்தவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கமச்செய்கையின் பலாபலன் எப்படியிருந்தபோதிலும் நிலக்குத்தகை குறிப்பிட்ட பிரகாரம் செலுத்தப்படவேண்டியதாகும்.

# எண்ணெய் வடி ஆலை
## அமைச்சர் கருத்து

கொழும்பு, வியாழன்

எண்ணெய்வடிஆலை ஒன்றை இலங்கையில் நிறுவும் வேலைகளில் மேலும் எவ்வித தாமதமும் ஏற்படுவதைத் தாம் விரும்பவில்லை என்றும், திறைசேரி இதுவிஷயத்தைக் கணிசமாகக் கவனித்துக்கொண்டுவருகிறதென்றும் கைத்தொழில்பகுதி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூறியுள்ளார். பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் வேலைகள் இதனுல் நிலைப்படுவது ஒருபக்கமாக, இம்முயற்சி அரசாங்கத்துக்கு குறிப்பிடத்தக்க அளவு பணத்தை மீதப்படுத்திக் கொடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இரண்டு முயற்சிகளுமே ஒன்றுக ஒரே காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டியது என அமைச்சர் கருதுகிறுர்.

## வீடு சென்று தாக்கினராம்

### காயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

நீர்வேலியைச் சேர்ந்த அருளானந்தம் இலங்கைநாயகம் என்பவர் அடிகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாரோ சிலர் கடந்த இரவு அவரின் இல்லத்திற்குச் சென்று தாக்கியதாகத் தெரிகிறது.

இச்சம்பவத்தையிட்டு அதே இடத்தைச் சேர்ந்த எஸ். இராசையா என்பவரைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் தேடிவருகின்றனர். கோப்பாய் பொலிஸார் புலன்விசாரணை நடாத்தி வருகின்றனர்.

---

## நிதி நெருக்கடி தோன்றக் காரணம்

### எம். பி. விளக்கம்

மாவனெல்ல, வெள்ளி

'எங்களது நாடு, இப்பொழுது நிதிநெருக்கடியொன்றை எதிர்நோக்கியுள்ளது. அழகு சாதனங்கள் மீது எமக்கு ஏற்பட்டிருக்கும் அதிக ஆசைதான் இந்த நிதிநெருக்கடிக்குக் காரணமாகும்' என்று கனிதென்ன வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாவனெல்ல எம். பி. திரு. பி. ஆர். ரத்னயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பகட்டையும் பெருமையையும் விரும்பும் இலங்கைப் பெண்கள், இங்கு தயாரிக்கப்பட்ட சேலைகளை அணிய விரும்புகிறார்களில்லை. என்றும் உள்நாட்டுத் தயாரிப்புகளை மக்கள் வாங்கும் வரை நிதி நிலைமையில் திருப்பம் ஏற்படாதென்றும் கூறினர்.

---

## கவலை வேண்டாம்

கொழும்பு, வெள்ளி

அராலி கிழக்கு-தெற்கு கிராமங்களுக்கூடாகச் செல்லும் வீதியின் மேற்குப்பக்கத்துவீதி, போக்குவரத்துக்கு தடையாகுமென வதந்திகேட்டு கவலை கொண்ட கிராமவாசிகள் பகிரங்க வேலைப்பகுதி அதிகாரிக்கும் உதவிஅதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர். சீர்கேடாகவிருக்கும் வீதியின் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவிதத்துள்ளனர்.

---

## சீன-செக். வர்த்தகம்

புதுடில்லி, ஜன. 17

1959-ம் ஆண்டுக்குப பிறகு சீனவுக்கும் செக்கோஸ்லாவாக்கியாவுக்குமிடையே பொருளாதார அரசியல் உறவு சுமுகமாக இருக்கவில்லை என இங்குள்ள ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

தற்சமயம் சீன-செக். வர்த்தகத்தை விடக்குறைவாகவுள்ளது.

சீனவுக்காக விசேஷமாக செக்கோஸ்லாவாக்கியா தயாரித்த ஆயுதங்கள் உருவாக்கப்பட்டு, மற்ற நாடுகளுக்காக இயந்திரங்களாக்கப்பட வேண்டியதாயிற்று. சீன அவற்றைப் பெற்றுக் கொள்ளாமையே இதற்குக் காரணமாகும்.

1950-51க்குப் பிறகு சீனவுக்கு செக். நாடு ஆயுத சப்ளை செய்ய வில்லை. என்று சொல்லப்படுகிறது.

1959-ல் சீனவில் 300 செக் தொழில் நுட்ப நிபுணர்கள் இருந்தனர். ஆனல் இப்போது இரண்டு அல்லது மூன்று பேர் தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறதுகட்டுப்பாடுகள், கண்காணிப்புகள் காரணமாக செக் நிபுணர்கள் சீனவை விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

## வார்த்தைப் பந்தலில் சீனவின் சாதனை

புதுடில்லி, ஜன. 17

இந்தியாவிற்கு எதிராக சீன 9 வருடங்களுக்கு முன் தொடங்கி நடாத்திவரும் 'வாய் சொற்போர்' உலகில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தி இருக்கிறது. ராஜதந்திர பேச்சுவார்த்தையில் இது மகத்தான சாதனையாகும்.

இந்திய - சீன எல்லைத்தகராறு குறித்து சீன - இந்திய அரசாங்கங்களும் இருநாட்டுப் பிரகமர்களிடையேயும் பரிமாறிக்கொண்ட கடித வாசகங்கள் 5,00,000 வார்த்தைகளை எப்போதோ தாண்டிவிட்டது.

எல்லைப் பிரச்னை குறித்து இந்திய அரசாங்கம் வெளியிட்ட 7 வெள்ளை அறிக்கைகள் சுமார் 900 பக்கங்கள் கொண்டவை. இவை மிகவும் நெருக்கமாக அடிக்கப்பட்ட பக்கங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

600 ஆட்சேபனைக் குறிப்புகளை இதுவரை இருநாடுகளிடையேயும் பரிமாறப்பட்டுள்ளது.

வார்த்தைகளை தாராளமாகக் கையாளுவதில் சீன முந்தவில் நிற்கிறது.

'பீகிங் பீப்பின்ஸ் டெய்லி' என்ற பத்திரிகையில் அண்மையில் வெளியாகியுள்ள கட்டுரையொன்றில் சுமார் 20,000 வார்த்தைகள உள்ளன. 'ரெட் பிளக்' என்ற பத்திரிகையில் வெளியாகிய ஆசிரியத் தலையங்கம் சுமார் 10,000 வார்த்தைகளில் அமைந்திருந்தது. இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் ஆசிரியத் தலையங்கங்கள் சுமார் 1000 வார்த்தைகளில் அமைகின்றன.

---

## கிறிஸ்தவர்களுக்கு ஒரு சவால்!

### சென்னையில் ஒலிவர்

சென்னை, ஜன. 18

ரோம் நகரில் திருச்சபை கவுன்சிலில் கலந்துவிட்டு சென்னை திரும்பிய சென்னை ஆர்ச் பிஷப் டாக்டர் லூயிஸ் மத்தியாஸுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் இலங்கையின் முன்னுள் கவர்னர் ஜெனரல் திரு ஒலிவர் குணதிலகா பேசுகையில், உலகில் தற்போதுள்ள பிரச்னைகள் கிறிஸ்தவர்களுக்கெல்லாம் ஒரு சவாலாகவிருக்கிறது என்று கூறினர்.

தமிழ்நாடு முதன் மந்திரி திரு. காமராஜர் பேசுகையில், கிறிஸ்தவர்கள் ஐக்கியமாக இருக்கவேண்டுமென்று கூறினர்.

திருச்சபை கவுன்சில் நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்று டாக்டர் மத்தியாஸ் குறிப்பிட்டார்.

---

## தலைக்கனத்தை தடுக்க தலைப்பாகை!

சென்னை, ஜன. 17

தலைக்கனம் ஏருமல் இருக்க என்ன செய்வேண்டும்? இதற்கு எத்தனையோ விளக்கங்கள் இருக்கலாம். ஆனல் இந்தியாவில் தலைசிறந்த விஞ்ஞானி டாக்டர் சி. வி. ராமன் புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக, ஒரு சர்வதேச விவாத அரங்கில் பேசுகையில், தலைக்கனத்தைத் தடுக்க தலைப்பாகையே சிறந்தது என்று கூறினர்.

'அளவுக்கு பாராட்டுக் கிடைத்தால், யாருக்குமே சில சந்தர்ப்பங்களில் தலைக்கனம் வந்துவிடும். அதைத் தடுக்கத்தான் இந்தத் தலைப்பாகை மண்டைக்கனம் வளர விடாமல் அதை இறுக்கிப் பிடித்து விடும் என்றும் டாக்டர் சி. வி. ராமன் கூறினர்.

## டெலிவிஷன் வகுப்பு

புதுடில்லி, ஜன. 17

புதுடில்லியில்பாடசாலைமாணவர்களுக்காகடெலிஷன் காட்சி நடத்த அகில இந்திய ரேடியோ திட்டமிட்டுள்ளது. நடைமுறை விவரங்கள் என்ற பெயரில் நடத்தப்படவிருக்கும் இந்த நிகழ்ச்சி மூலம் எல்லை நிலைமை சம்பந்தப்பட்ட தகவல்கள், எல்லைப் பகுதிகள் அங்கு வாழும் மக்கள் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவிருக்கின்றன. டில்லியில் சுமார் 35 ஆயிரம் மாணவர்கள் இந்த டெலிவிஷன் காட்சியைக்காண்பர் என்று மதிக்கப்பட்டுள்ளது.

---

## ஷோம்பே—ஐ. நா. உடன்பாடு

எலிஸபெத்வில்லி, ஜன. 18

ஷோம்பேயின் இறுதிக் கோட்டையாக விளங்கிய கேல்வேஸிக்குள் ஐ. நா. துருப்புக்கள் பிரவேசிப்பது சம்பந்தமாக ஐ நா. அதிகாரிகளுக்கும் ஷோம்பேக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது எலிஸபெத்வில்லியிலுள்ள திரு. ஷோம்பே சனிக்கிழமை கோல்வேஸிக்குச் செல்வார். ஐ. நா. துருப்புக்கள் திங்கட்கிழமையன்று கோல்வேஸிக்குள் பிரவேசிக்கும்

---

## கிராம சேவகர் நியமனம்

### பல பகுதியில் கண்டனம்

மட்டக்களப்பு, வெள்ளி

கிராம சேவகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முறை குறித்து அகில இலங்கை கிராமத் தலைவர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை, கைத்தொழில், கலாச்சார மந்திரிக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

கைத்தொழில். கலாச்சார மந்திரிக்கு இச்சங்கம் அனுப்பியுள்ள மகஜரொன்றில் தற்போதுள்ள கிராமத் தலைவர்கள், கிராம சேவகர்கள் சேவையில் சேர்ககப்படாவிட்டாலும், அவர்களின் பதவிக்காலம் காலாவதியடையும் வரை அவர்கள் பதவியில் தொடர்ந்திருக்க வேண்டுமென்றும் காலியாக இடமேற்படும் பொழுது கிராம சேவகர்கள் நியமிக்கப்படலாமென்றும் தெரிவித்துள்ளது.

### தம்பதெனியாவில்

கட்டுக்கம்பளை, ஹட்பட்டுவ என்ற இடத்தைச் சேர்ந்த கிராமசேவை விண்ணப்பதாரர்கள், கிராம சேவகர்கள் தெரிவு செய்யப்பட்ட முறைக்குக் கண்டனம் தெரிவிக்கு முகமாக காங்கிரஸ் ஒன்றை அமைத்துள்ளனர்.

வட்டகெதரவில் நடைபெற்ற இக் காங்கிரஸ் துவக்க விழாவில், இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மகஜா ஒன்று அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### பத்தேகமவில்

"கிராமத் தலைவர்கள் சேவையை ஒழிக்கவேண்டுமென்ற யோசனைக்கு நாம் கண்டனம் தெரிவிக்கவில்லை ஆனல் கிராம சேவகர்கள் தெரிவு நடைபெற்றிருக்கும் முறையையே நாம் கண்டிக்கின்ேறும்" என்று பத்தேகமவில் நடைபெற்ற கண்டனக் கூட்டமொன்றில் அகில இலங்கைக் கிராமத் தலைவர்கள் சங்கத்தின் தலைவர் திரு. சி. டி. எதிரிசிங்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசாங்கத்தின் ஆதரவாளர்களான கிராமத்தலைவர்கள் கல்வி இலாகா நடத்திய பரீட்சையில சித்திபெருதது பெரிதும் வியக்கத்தக்கதோர் விஷயமாகும் என்று கூறினர்.

## நாட்டின் நிலைமைபற்றி மந்திரி

கம்புறுபிட்டியா, வெள்ளி

நாட்டின் பொருளாதார நிலைமை இப்பொழுது திருப்திகரமாகவிருப்பதுடன் உணவுப் பொருட்களின் பற்றுக் குறையும் நீங்கியுள்ளது என்று கம்புறுபிட்டியாவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளையின் துவக்க விழாவில் ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா பேசுகையில் கூறினர்.

மந்திரி தொடர்ந்து பேசுகையில், எதிர்காலத்தில் மக்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்புமே அவசியமென்று கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

"காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சிதான் அதிக எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. ஆனல் அது இப்பொழுது அதிகரிக்கவில்லை. ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ருலும் அதைப்பற்றி மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. அரசாங்கத்துக்கு மக்கள் நல்லாதரவு கொடுக்கவேண்டும்."

---

## மாணவர்களுக்கு தேரோ அறிவுரை

வத்தளை, வெள்ளி

பல்கலைக் கழகத்தின் மதிப்பு மாணவர்களில்தான் தங்கியிருக்கிறதென்று வித்தியாலங்கார பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ஸ்ரீ பிறக்னசாறநாயக்க தேரோ பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாட்டின் நலனுக்காக தங்களது சேவைகளை பல்கலைக் கழக மாணவர்கள் அர்ப்பணித்தால், பல்கலைக் கழக பேராசிரியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் பெருமையாகவிருக்குமென்று கூறினர்.

---

## பிக்கு உண்ணுவிரதம்

மின்னேரியா, வெள்ளி

பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிலத்தை தனக்குத் தரும்படி புத்த பிக்கு ஒருவர் உண்ணுவிரதம் மேற்கொண்டார். இவர் தனது உண்ணுவிரதத்தை பொல்லநறுவா அரசாங்க அதிபர் கந்தோர் வாசலில் நடத்தினர். அவர் தரும்படி கோரும் நிலம் பாடசாலைக்கு ஒதுககப்பட்டுள்ளதால் வேறு நிலம் தருவதாக அரசாங்க அதிபர் கூறியும் அவர் கேட்டாரில்லை. பிக்கு கந்தோர் வாசலில் உண்ணுவிரதம் மேற்கொண்டிருந்ததால் அரசாங்க அதிபர் பின் வாசலாலேயே கந்தோருக்குப் போய்வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஈற்றில் பிக்கு தனது உண்ணுவிரதத்தைக் கைவிட்டார்.

## ரு. 750 அபராதம்

மஹர, வெள்ளி

பெல்லுமஹர என்னுமிடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தமது வீட்டில் கசிப்பு வடித்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், கம்பஹா மாஜிஸ்டிரேட் அவரைக் குற்றவாளி எனக்கண்டு 750 ரூபா அபராதம் விதித்தார்.

ஏழரைக்கலன் கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட மற்ருெருவருக்கு அதே மாஜிஸ்டிரேட் 500 ரூபா அபராதம் விதித்தார்.

---

## 'தேசிய நலனுக்காக பாடுபடவேண்டும்' —டட்லி

டெடிகம, வெள்ளி

'தேசிய நலனுக்காகவும், நாட்டின் சமய விருத்திக்காகவும் உழைக்கவேண்டியது மக்களின் முக்கிய கடமையாகும்' என்று அடுறபொத்த என்ற இடத்தில் நடைபெற்ற புதிய விகாரை திறப்பு விழாவில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாட்டில் இப்பொழுது தோன்றியுள்ள நிலைமையினுல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்று கூறனர்.

---

## சிக்கனக்குழு

கொழும்பு, வெள்ளி

அரசாங்க இலாகாக்களில் பிரயோசனமற்றுப் போகும் பொருட்களின் தொகையை எப்படி குறைப்பது என்பது பற்றியும் எந்த எந்த விதத்தில் பொருட்களை சிக்கனப் படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றியும் ஆராயும் பொருட்டு சிவில் உத்தியோகஸ்தர்களும், உயர்தர அதிகாரிகளும் கொண்ட குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது. இவை பற்றி ஆராயும் பொருட்டு நிதி மந்திரி தலைமையில் நடைபெற்ற மகாநாடொன்றில் விவசாயப் பகுதி கூட்டுறவு இலாகா ஆகிய இலாகாக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், சிவில் உத்தியோகத்தர்களும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. உத்தரவாத விலைத் திட்டம் பற்றியும் விசேடமாக ஆராயும் இக் குழு அரசாங்க இலாகாக்களில் பிரயோசனமற்றுப் போகும் பொருட்களின் தொகையைக் குறைப்பதற்கான வழிகளையும் சிக்கனமான முறைகளையும் ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யும்.

---

வத்தளை, வெள்ளி

வத்தளை, கெக்கிட் வீதியில் உள்ள மாளிகையொன்றில் 3379 ரூபா 25 சதம் பெறுமதியான பணமும் நகைகளும் திருட்டுப்போயுள்ளன. சென்ற செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் தான் இத்திருட்டு நடைபெற்றிருக்கலாம் என மாளிகைச் சொந்தக்காரர் பொலிசாரிடம் தெரிவித்தார். பொலிசார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

## 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் விநியோகம் பற்றி தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக் காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி
'ஈழநாடு' (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு4.

The Manager,
'EELANADU' (COLOMBO)
Saraswathy Hall,
Lorensz Road,
Colombo 4.

Phone: 81975

# கட்டிடசொந்தக்காரர் நடுத்தெருவில் நிறுத்தினர்!

## கோர்ட் உத்தரவின்மூலம் குடும்பம் மீண்டும் குடியேறியது

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணார்பண்ணை சிவன் கோயில் மேற்கு வீதியில் உள்ள ஒரு கட்டடத்தில் வசித்துவந்த குடும்பமொன்றினை இன்று நண்பகல் திடீரென அக்கட்டடச் சொந்தக்காரர் பலாத்காரமாக வெளியேற்றிய பரிதாபகரமான சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

ஏழுபேர் கொண்ட அக்குடும்பத்தை வெளியேற்ற கட்டடச் சொந்தக்காரர் கோர்ட்டில் செய்த மனுவின்படி கட்டிடத்தில் வசிக்கும் இந்தக் குடும்பத்திற்கு இருவருடகால அவகாசம் அளிக்கப்பட்டது. அக் குடும்பத்தினர் வீட்டைவிட்டு வெளியேற இன்னும் பத்துமாதகால அவகாசம் இருக்கிறது.

கட்டடத்தின் சொந்தக்காரர் நேற்றையதினம் கோர்ட்டில் உத்தரவு ஒன்றினைப் பெற்று இன்று நண்பகல் இந்தக் குடும்பத்தினரை வெளியேற்றுமாறு அறிவித்தனர். வீட்டிலுள்ளவர்கள் வெளியேற மறுத்தனராயினும், ஏலக்கமிஷனருடன் வந்த உரிமையாளரால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். அக் குடும்பம் நடுத்தெருவில் நிற்க நேரிட்டது. தெருவில் மக்கள் பெருமளவில் கூடி இந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்டனர் குடும்பத்தினர் பொருள்களும் வெளியேற்றப்பட்டு கதவுகள் பூட்டப்பட்டன.

வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் இந்தக்குடும்பத்தினருக்காக கோர்ட்டில் ஆஜராகி விசேஷ உத்தரவு ஒன்றினை பெற்றதினால் முதல் நாள் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

கட்டடம் உரிமையாளரால் பூட்டப்பட்டிருந்தமையால், பிஸ்காலுடன் வந்து பூட்டுகள் உடைக்கப்பட்டதுடன் வெளியேற்றப்பட்ட இந்தக் குடும்பத்தினர் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

உதைபந்தாட்டம்

## வெற்றி தோல்வி இல்லை

### தபால்இலாகா-கச்சேரி கோஷ்டி போட்டி முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர், உதைபந்தாட்டச் சங்க உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளைச் சேர்ந்த தபால் இலாகாக் கோஷ்டிக்கும் கச்சேரிக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இரு கோஷ்டிகளும் சமாதானமுறயில் விளையாடிய போதிலும் தபால் இலாகாக் கோஷ்டி பந்து காப்பாளரின் கவனக்குறைவால் அக் கோஷ்டி வெற்றியீட்ட முடியவில்லை. பதிலுக்கு அவர் எதிர்க்கோஷ்டி ஒருகோலைப் போடுவதற்கு உதவிபுரிந்துவிட்டார்.

இரு கோஷ்டிகளைச் சேர்ந்த முன்னணி வீரர்களும் திறமையாக ஆடவில்லையென்றாலும் பாதுகாப்பு அணிவீரர்கள் இரு கோஷ்டியிலும் பாராட்டைப் பெறுமளவுக்குத் திறமையாக விளையாடினர்.

கச்சேரிக்கோஷ்டி ஒரு கோலையும் தபால் இலாகாக் கோஷ்டி ஒருகோலையும் போட்டுக் கொண்டபடியால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்திற்கு திரு. எஸ். ஞானரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

அல்வாய் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியன் விருதுகளைக் சுவீகரித்த வதிரி டயமன்ட்ஸ் கோஷ்டியினரைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு விருந்துபசாரமொன்று அளிக்கப்பட்டது.

## செய்தித் திட்டு

### ஆஸ்பத்திரிக்கு விஜயம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

வடபகுதி சுகாதாரப்பகுதி அத்தியட்சகர் டாக்டர் திரு. நகானிபல் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார். ஆஸ்பத்திரியில் அவசியமான மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அத்தியட்சகரிடம் புகார் கூறப்பட்டது.

∴ ∴ ∴

### காலையிலும் கூடப்படும்

தொல்புரம், வெள்ளி

இதுவரைகாலமும் பிற்பகலில் கூடப்பட்டுவந்த தொல்புரம் மூட்டுச்சந்தை கிராமமக்களின் வசதிக்கேற்ப இம்மாதம் 28-ந் திகதிமுதல் காலையிலும் கூடப்படும்.

∴ ∴ ∴

### இடமாற்றம்

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி தெற்கு அ. மி. பாடசாலையில் உதவிஆசிரியராகக் கடமையாற்றிய திரு. நா. செல்வநாயகம் திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் கடந்த நான்கு வருடங்களாகக் கடமையாற்றிய விகிதர் திரு. நமசிவாயம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். வவனியாவில் கடமையாற்றிய திரு. அலோசியஸ் இவருடைய இடத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை அரசாங்க வைத்தியசாலையைச் சேர்ந்த அப்போதிக்கரி திரு. இராசரத்தினம் பருத்தித்துறை அரசாங்க வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்திற்கு காரைநகரைச்சேர்ந்தஅப்போதிக்கரி திரு. கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

### தேர்த்திருவிழா

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் கொட்டடி வளவில் எழுந்தருளியிருக்கும் ஆதிமுத்துமாரிஅம்பாள கோவிலில் விநாயகப் பெருமானின் சிதம்பர யாத்திரைத் தேர்த்திருவிழா தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்றது.

∴ ∴ ∴

### இலவச சமயதீட்சை

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கத்தின் ஆதரவில் பெப்ரவரி மாதம் மூன்றும் திகதி சுண்டிக்குளி தல்லாலை ஸ்ரீ விநாயகராலயத்தில் இலவச சமயதீட்சை கொடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 19-1-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வி சங்கரலிங்கம் — வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 என். சுப்பையாபிள்ளை — பேச்சு, 9-30 இராம் குமாரசாமி — பாட்டு.

#### ஞாயிறு 20-1-63

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஏ. சோமசுந்தரம் — பாட்டு, 5-45 திரை இசை, 6-10 குரல்வகை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-30 சிரோன்மணி பொன்னுத்துரை — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'நல்லதோர் வீணை செய்தே' — இசை நாடகம், 9-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-10 தேர்ந்த இசை.

### திருச்சி

#### சனி 19-1-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-15 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 தின்னியம் எஸ். கிருஷ்ணமூர்த்தி — வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 தின்னியம் எஸ். கிருஷ்ணமூர்த்தி — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 "கர்" — நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-15 இசைக்கோலம், 9-30 மதுரை மணிஐயர் — பாட்டு.

#### ஞாயிறு 20-1-61

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 எஸ். கே. சுமதி — பாட்டு, 8-15 இசைக கோவை — நாதஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 'ஆலயமணி' — ஒலிச்சித்திரம்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டுமுரசே — சித்திரம், 7-45 ஸ்ரீவாஞ்சியம் க. ராமச்சந்திரய்யா — பாட்டு, 9-15 தேசபக்தி பாடல்கள், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.



# 'தமிழ்க் கடிதங்கள் கவனிக்கப்படுகின்றன'

## கிழித்ததாக கூறப்படும் புகார் நிரூபிக்கப்படவில்லை

கொழும்பு, வெள்ளி

**"அரசாங்க இலாகாக்களுக்குத் தமிழில் எழுதப்படும் கடிதங்கள் எப்பொழுதும் கவனிக்கப்பட்டு வந்திருப்பதுடன் இனியும் அவை தொடர்ந்து கவனிக்கப்படவே வரும். எந்த ஒரு அதிகாரியாவது தமிழில் வரும் கடிதங்களை கிழித்தெறிந்ததாக அல்லது காரணமின்றி வேண்டுமென்றே தாமதித்ததாகப் புகார் ஏதும் கிடைத்தால் அந்த அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படும்.**

இவ்வாறு சபைமுதல்வர் திரு. சி. பி. டி' சில்வா இன்றுகாலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின்கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர் திரு. எஸ். பெல்பொல தலைமையில் இன்று காலை 10 மணிக்கு கூடியது. கேள்வி நேரத்தின்போது தமிழரசுக் கட்சியின் தலைவரும், காங்கேசன் துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. சி. பி. டி' சில்வா பின்வருமாறு கூறினர்:-

விவசாயப் பகுதிக் காரியாலயத்தின் பிரிவுத் தலைமை அதிகாரியொருவர், மட்டக்களப்புப் பகுதி உதவி விவசாயப் பகுதி அதிகாரியொருவர் சமர்ப்பித்த தமிழில் எழுதப்பட்ட கடிதமொன்றை, "தமிழ்க் கடிதங்களை நான் இப்படித்தான் செய்வது வழக்கம்" என்று கூறியபடியே கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டதாக, விவசாய சேவை மாவட்ட உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கூட்டம் அரசாங்கசேவைக் குமாஸ்தாக்கள் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. குயின்டஸ் ஜயவர்த்தன தெரிவித்தது அரசாங்கத்துக்குத் தெரியும்.

### நிரூபிக்கப்படவில்லை

தனது முன்னிலையிலேயே அந்த அதிகாரி அந்தத் தமிழ்க் கடிதத்தைக் கிழித்தெறிந்ததாகவும் திரு. ஜயவர்த்தன தெரிவித்திருந்தார். இக்குற்றச்சாட்டுப்பற்றி இலாகா ரீதியில் விசாரணை நடைபெற்றது. விசாரணையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

தமிழில் எழுதப்படும் கடிதங்கள் யாவும் கவனிக்கப்பட்டு வருகின்றன. இனியும் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வரும். எழுதப்படும் எந்தக் கடிதத்தையாவது எந்த அதிகாரியாவது கிழித்தெறிந்தால் அல்லது அனவசியமாக வேண்டுமென்றே தாமதப்படுத்தினல் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

---

## ஆறு புதிய வட்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கீழ்க்காணும் கொள்கைகளுக்கமைய நான் முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

(1) 10, 14, 2, 3 ஆகியவட்டாரங்கள் விஸ்தீரணத்திலும் சனத்தொகையிலும் அதிகமானவை. ஒவ்வொரு வட்டாரங்களிலும் 4000 வாக்காளருக்குமேல் இருக்கிறர்கள்.

(2) 1, 5 ஆகிய வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 1600 க்கு குறைந்த வாக்காளர்கள் இருக்கிறர்கள்,

(3) 4, 7, 11, 12, 13, 15 ஆகிய வட்டாரங்களில் 2000 க்கு மேற்பட்டு 2,600 க்கு குறைவான வாக்காளர்கள் இருக்கிறர்கள்.

(4) 6, 8, 9 ஆகிய வட்டாரங்களில் 2,800 க்கு மேற்பட்டு 3800 க்கு குறைவான வாக்காளர்கள் இருக்கிறர்கள்.

உத்தேசிக்கப்பட்டுள்ளது போன்று பாஷையூர் வட்டாரம் 4-ம் வட்டாரத்திலிருந்து வேருகப் பிரிக்கப்பட்டால் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திலும் 1300 வாக்காளர்கள் இருப்பார்கள். 11, 12-ம் வட்டாரங்களிலிருந்து நாவாந்துறை வட்டாரம் பிரிக்கப்பட்டால் ஒவ்வொரு வட்டாரத்திலும் 1600 வாக்காளர்கள் இருப்பார்கள். மற்ற வட்டாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில இது நியாயமற்றதாகவிருக்கும்.

யாழ்ப்பாண நகரசபை வட்டாரவாக்காளர் தொகையில் நான்கில் ஒரு பகுதியினருக்கு மேலான எண்ணிக்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழருக்கு ஒரு வட்டாரமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனல் இந்த வட்டாரத்தோடு கரையூர் வீடமைப்புத் திட்டத்திலுள்ள வாக்காளர் சேர்க்கப்பட்டதால் இதிலும் சிறுபான்மைத் தமிழர் தோற்கடிக்கப்பட்டு விட்டனர்,

எனவே சிறுபான்மைத் தமிழர் போதிய பிரதிநிதித்துவம் வகிக்க 4 வட்டாரங்கள் அவர்களுக்கென ஒதுக்கத்தக்கநடவடிக்கை எடுக்குமாறுகோருகிறேன். இருபுதிய வட்டாரங்களின்றிமேலும் 6 புதிய வட்டாரங்கள் உருவாக்கப்படவேண்டுமெனக்கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) ஜுபிட்டர் (குருணகலை) லக்ஷ்மி (இரத்தனபுரி)

தீவொளி (நுவரேலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ருகலை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
ஈர். எஸ். சரோஜா, மோகுை
மற்றும் பலர் நடித்த

ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன், சரோஜா தேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
கல்யாண பரிசு

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவிதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# அரசியல் உரிமை!

## பார்லிமெண்டில் கேள்விபதில்!

கொழும்பு, வெள்ளி

"அரசாங்க உத்தியோகஸ்தர்களே கட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கே அரசியலுரிமை பெற்றிருக்கிருர்கள். ஆனல் உத்தியோகம் வகிப்பவர்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒருசிறிதளவு தொகையினராகவே இருக்கின்றனர்."

இவ்வாறு இன்று பார்லிமெண்ட் கூட்டத்தில் டாக்டர் டபிள்யு. டி. டி' சில்வா கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில்தொழில்மந்திரிதிரு எம். பி. இசற். சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

இலங்கையில் உத்தியோகம் வகிப்பவர்களில் பெருந்தொகையானேர் அரசியலுரிமை இல்லாமல் இருக்கிருர்கள் என்று மந்திரிக்குத் தெரியுமா என்று திரு. டபிள்யு டி. டி' சில்வா கேட்டார்.

---

## கள் இறக்கும் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட இலங்கை கள்இறக்குந் தொழிலாளர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் இன்று திரு. எஸ. ஆர். யேக்கப் தலைமையில் நடைபெற்றது.

பொதுக் காரியதரிசி எம். சி. சுப்பிரமணியம் கூட்டுறவு முறையில் போத்தலில் கள் அடைப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கிப் பேசினர்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

மதுபரிபாலனகமிஷனர் முன் மரவரி முறையால் ஏற்படும் நன்மைகளை விளக்கியும் கலால் இலாகாவில் நிலவும் கைலஞ்சத்தை ஒழிப்பதன் அவசியத்தைப் பற்றியும் சாட்சியம் சொல்வது.

வடமாகாணத்தில்போத்தலில் கள் கூட்டுறவுமுறையில் அடைப்பது. இதற்கு முற்பணம் ரூ. 200 உதவிசெய்வது.

---

கொழும்பு, வெள்ளி

அமெரிக்கா அன்பளிப்புச் செய்துள்ள விசேஷ மின்சார உபகரணங்கள், இன்று மந்திரி திரு. வி. பி. டி' சில்வா பொறுப்பேற்றுக்கொண்டார்.

---

## 920 அரிசி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் செல்கையிலேயே இந்த மோசடி இடம்பெற்றதாக நம்பப்படுகிறது.

அரிசி மூட்டைகளின் எண்ணிக்கை குறைந்ததுபற்றி உணவுக் கட்டுப்பாட்டு இலாகா பொலிசாருக்குப் புகார் செய்ததன்பேரில் பொலியார் விசாரணை நடத்தியபோதே மேற்கண்ட நபர் கைதுசெய்யப்பட்டார். பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்துவருகின்றனர். இந்த மோசடி சம்பந்தமாக இன்னும் பலர் கைதுசெய்யப்படலாமெனத் தெரிகிறது.

# 1694 கோடி திட்டச்செலவு

புதுடில்லி, ஜன. 18

1963-64-ம் ஆண்டுக்கு திட்டச் செலவு 1694 கோடி ரூபாவை, இன்று தேசிய அபிவித்திச் சபையின் நிரந்தரக் கமிட்டி அங்கீகரித்தது. இதில் 944 கோடி மத்திய அரசாங்கத் திட்டங்களுக்கும், 750 கோடி ரூபாய் ராஜ்ய அரசாங்கத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

---

## நாவற்குழி கி. ச. இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், சனி

நாவற்குளி கிராமசபை 3-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை நியமனப்பத்திரங்கள் பெப்ரவரி மாதம் 6-ந் திகதி ஏற்றுக்கொள்ளப் பகிவிருக்கிறது.

---

## அறிவித்தல்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை இம்மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 8-30 மணிக்கு மறுபடியும் அரம்பமாகும்.

விடுதி மாணவர்கள் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரமே வருவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருக்கின்றன.

R. M. சின்னையா
தலைவி

---

## கேள்வி விளம்பரம்

26-1-63 சனிக்கிழமை முற்பகல் 10 மணிவரை கீழ்க்காணும் வேலைகளுக்கு சீல் வைத்தவிண்ணப்பங்கள் கிராமசபைக் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரத்தின் பிரதியொன்று உள்ளூராட்சி உதவி அதிபருக்கும் அதே காலத்தில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பம் செய்வோர் ரூ 25/- கட்டுப் பணமாகவும் ரூ. 5/- கேள்விப் பத்திரப்பணமாகவும் செலுத்தி உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே விண்ணப்பிக்கவேண்டும், கேள்விப் பத்திரங்கள் 25-1-63 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை கிராமசபைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல்முனையில் வேலையின் பெயர்கள்குறிப்பிடப்படவேண்டும்.

### வேலைகள்

1. குழமங்கால் ஒழுங்கை
2. சித்கட்டியான் ஒழுங்கை
3. கிராமசபை ஒழுங்கை
4. ஆனைவிழுந்தான் காடிவளை ஒழுங்கை
5. கயட்டாவத்தை பிளார்வை ஒழுங்கை
6. கீரிமலை அபிவிருத்தி வேலைகள்
7. கீரிமலை பஸ்காலை பிரயாணிகள் தங்குசாலை

### கிணறுகள்

1. கிராமசபை வளவுக் கிணறு
2. 16-ஆம்வட்டாரக்கிணறு

கு. கதிரைஆண்டி
தலைவர்.

கிராமசபை,
தெல்லிப்பழை.

---

## யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் வருடாந்தக் கொண்டாட்டம்

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 1963-ம் வருட கொண்டாட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை ஜனவரி 27-ம் திகதி காலை 9 மணிக்கு பூஜையுடன் ஆரம்பமாகும். 9-30 க்கு கிரிக்கட் விளையாட்டுப் போட்டி இடம்பெறும். 1 மணிக்கு மத்தியான உணவு. 2-30 க்கு வருடாந்தப்பொதுக்கூட்டம். மாலை 4 மணிக்கு கல்லூரி அதிபரின் தேநீர் விருந்து. 4-30 க்கு உதைபந்தாட்டப் போட்டியும் கைப்பந்தாட்டப்போட்டியும் நடைபெறும்.

சகல பழைய மாணவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வருட சாந்தா ரூ. 2-50 — ஆயுள் சாந்தா ரூ. 25-00

யாழ். இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஏ. சோமாஸ்கந்தா
கௌரவகாரியதரிசி